வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 08.05.2021 சனிக்கிழமை | இதழ் : 157 | பக்கங்கள் : 16




# நிலைமை மோசமடைந்தாலேயே நாட்டை முற்றாக முடக்குவோம்!

## இப்படிக் கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி



கொழும்பு, மே. 08

"நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள போதிலும் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு சகலருக்கும் தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளை மீறிய விதத்தில் வைரஸ் பரவல் ஏற்படின் தேவைப்படும் பட்சத்தில் நாட்டை முழுமையாக முடக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்."

- இவ்வாறு கொரோனா விவகாரங்களுக்குப் பொறுப் 15

# நாட்டை ஒருபோதும் முடக்கவே முடியாது!

## கொரோனாவுக்கு எதிராக ஓரணியில் நின்று போராடுவோம் என மஹிந்த பகிரங்க அழைப்பு



கொழும்பு, மே. 08

"தற்போது முழு உலகமும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராகப் போராடி வருகின்றது. கொரோனாத் தொற்று காரணமாக நமக்கு நாட்டை ஒருபோதும் முடக்க முடியாது. வைரஸுக்கு எதிராகப் போராடும் அதேவேளை நாட்டு மக்களின் பொருளாதார நிலை குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்."

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 15

### யாழ். பல்கலைக்கழகத்தின்

# கிளிநொச்சி வளாக மாணவர்களை வீடுகளுக்கு அனுப்புவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், மே. 08

நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பொறியியல் பீடம், விவசாய பீடம், தொழில் நுட்ப பீடம் ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகள் இடை 15

# யாழ்ப்பாணத்தில் நேற்று 18 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மே. 08

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 18 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 20 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை நேற்று வெளிக்கிழமை கண்டறியப் பட்டுள்ளது என்று 15

### யாழ். மாநகர காவல் படை விவகாரம்:

# மேயர் நியமித்த 5 உத்தியோகத்தர்களும் ரி.ஐ.டியினரின் விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே. 08

யாழ். மாநகரத்தில் தண்டப் பணம் அறவிடும் நடைமுறையைக் கையாள்வதற்காக மாநகர மேயரால் நியமிக்கப்பட்ட மாநகர காவல் படையின் உத்தியோகத்தர்கள் ஐந்து பேரும் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட் 15

# நேற்று மட்டும் 19 பேர் பலி!

கொழும்பு, மே 08

இலங்கையில் நேற்று கொரோனாவினால் 19 பேர் மரணமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சு நேற்றிரவு அறிவித்தது.

இதன்மூலம் கொரோனாவினால் இலங்கையில் மரணமடைந்தவர்களின் தொகை 764 ஆக உயர்ந்துள்ளது. இலங்கையில் கொரோனா தொற்று பரவிய பின்னர் ஒரே நாளில் அதிகளவானோர் மரணமடைந்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

# மூன்று மாத சிசுவுக்கும் கொரோனாத் தொற்று!

கொழும்பு, மே. 08

புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் மூன்று மாதக் கைக்குழந்தை கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளது.

கருவலகஸ்வெவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இந்தத் தகவலை வெளியிட்டது. 15

# தடுப்பூசி வழங்குவதை விரைவுபடுத்துங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, மே 08

கொவிட் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குதல் மற்றும் நாட்டுக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை துரிதப் படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப் 15

# சீனோபார்ம் தடுப்பூசியை இலங்கையர் ஏற்ற அனுமதி

கொழும்பு, மே. 08

சீனாவின் சீனோபார்ம் கொவிட் 19 தடுப்பூசி அடுத்த வாரம் முதல் இந்நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன 15

# 600,000 "அஸ்ட்ராசெனேகா" பெற உலக சுகாதார தாபனம் உதவும்!

## அதன் பணிப்பாளர் நாயகத்துடனான பேச்சில் ஜனாதிபதி நம்பிக்கை





கொழும்பு, மே 08

இரண்டாவது கட்டமாக தடுப்பூசி ஏற்றுவதற்கு 20 மில்லியன் "அஸ்ட்ரா செனேகா" தடுப்பூசிகளுக்கான தேவை உலகளவில் உள்ளது. இலங்கையில் அதன் தேவை 15

# நேற்றும் 1,914 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, மே. 08

இலங்கையில் நேற்றும் 1,914 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்த காட்சிதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

அவரை எல்லோருமே எப்போதும் அடித்துக்கெண்டே இருப்பார்கள். அவரும் தொடர்ந்து அடிவாங்கிக் கொண்டே இருப்பார். ஒரு தடவை அவரோடு கூடவே திரியும் அவரின் நண்பர் ஒருவர் கேட்பார், 'அண்ணே எவ்வளவு அடி அடித்தாலும் வாங்கிக்கொண்டே இருக்கிறீர்களே ஒருவனுக்காவது நீங்கள் திருப்பி அடித்தால் என்ன என்று'. அதற்கு அவர் சொல்லுவர், அடிக்கிறவன் எல்லாம் என்னை நல்லவன் எண்டும் சொல்லுறாங்களேடா, எப்படி அவங்களைப் போய் அடிக்கிறது என்று... இந்தக் காட்சிதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தும் விடயத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் நடந்துகொள்கின்ற விடயங்களைப் பார்க்கின்றபோது, குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது இந்த வடிவேலு அடிக்கடி நினைவில் வந்துபோகின்றார்.

கல்முனை பிரதேச சபையை தரம் உயர்த்தக்கோரி, ஒரு பௌத்த துறவியும் மேலும் சில உள்ளூர் பிரமுகர்களும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதை மறந்திருக்க மாட்டீர்கள்.

நல்லாட்சி அரசின் காலத்தில் நடந்த அந்தப் போராட்டத்தை முடித்துவைக்க சுமந்திரன் தலைமையில் சென்ற அரசின் பிரதிநிதிகளிடம் போராட்டக்காரர்கள் நடந்துகொண்ட விதமும் சர்ச்சைக்குரியதாக ஆகியிருந்தது.

நல்லாட்சி அரசின் காலத்தில் கூட்டமைப்பினர் ரணில் அரசுக்கு எவ்வளவு முக்கியமானவர்களோ, அதேயளவு முஸ்லிம் எம்பிக்களும் முக்கியமானவர்களாகவே இருந்தனர்.

இரு தரப்பினரிலும் எவர் ஒருவர் ஆதரவை விலக்கிக் கொண்டாலும் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்ற நிலை. தமிழர் தரப்பிற்காக கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தினால், முஸ்லிம்கள் அரசிலிருந்து வெளியேறிவிடுவார்கள் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். ஆனால், தமிழர் தரப்பை 'சமாளிப்பது' எப்படி என்பதும் ரணிலுக்குத் தெரிந்திருந்ததால் அந்தக் காலத்தில் அதனை அவர் செய்யாமல் தவிர்த்துக் கொண்டார்.

இரண்டு தடவைகள் ரணில் அரசு நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்கொண்டபோதிலும், இரண்டு தடவையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒரே பத்துக் கோரிக்கைகளை எழுத்தில் கொடுத்து அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என்று ரணிலிடம் உத்தரவாதம் பெற்றுக்கொண்டமை தெரிந்த சங்கதிதானே.

கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதை விட ரணில் அரசு தொடர்வது தமிழ் மக்களுக்கு அதிக நன்மை என்று அவர்கள் கருதியிருக்கலாம்.

ஆனால், கிழக்கு மாகாண சபையில் தனிக் கட்சியாக அதிக ஆசனங்களை வைத்திருந்தபோதிலும், முஸ்லிம் காங்கிரஸிடம் ஆட்சியைக் கொடுத்து விட்டு இரண்டு அமைச்சுக்களை தாம் பெற்று, முஸ்லிம் மக்களுடன் நல்லெண்ண அரசியல் நடத்திய காலத்திலாவது, முஸ்லிம் காங்கிரஸுடன் பேரம்பேசி இதனை பெற்றுக்கொள்ள கூட்டமைப்பு எந்த பிரயத்தனமும்செய்யவில்லை.

இப்போது, ராஜபக்ஷ அரசு முஸ்லிம் அரசியல்வாதிகளை சற்று தூரத்தில் வைத்திருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

ஆனாலும், இருபதாவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்பட்டபோது முஸ்லிம் எம்.பி.க்கள் சிலரின் ஆதரவைப் பெற்றிருந்தது. ஆதரவளித்த அந்த முஸ்லிம் எம்.பிக்கள் தனிப்பட்ட வகையில் எதைப் பெற்றுக் கொண்டார்களோ தெரியவில்லை. ஆனால், அவர்கள் தமது இனத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அந்த ஆதரவை பயன்படுத்துகின்றார்கள் என்பதை இன்று அவதானிக்க முடிகின்றது.

இருபதாவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த பின்னர், கல்முனையின் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான ஹரீஸ், தான் முஸ்லிம் மக்களின் நன்மை கருதியும் குறிப்பாக கல்முனையின் நன்மை கருதியுமே அந்த முடிவை எடுத்தாரெனத் தெரிவித்திருந்தது ஞாபகத்திற்கு வருகின்றது.

அதேவேளை, நேற்றைய தினம் முஸ்லிம் காங்கிரஸின் மற்றுமொரு எம்.பி.யான நசீம், தான் பொத்துவில் முதல் பொலிகண்டிவரையான பேரணியில் கலந்துகொண்டதற்காக வருத்தப்படுவதாக தெரிவித்திருக்கிறார்.

ஆக, முஸ்லிம் தரப்பிலிருந்து இதுபோன்ற செய்திகள் வந்துகொண்டிருக்கும்போதுதான் கூட்டமைப்புத் தரப்பிலிருந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட பேச்சு நடப்பதாக செய்திகள் வருகின்றன.

எவ்வளவுதான் அடிவாங்கினாலும் அவர்கள் மொழியால் ஒன்று என்ற விடயம் நம்மவர்களை வடிவேலுவின் நிலைக்கு கொண்டுசெல்கின்றது போலும்...!

**- ஊர்க்குருவி.**

# கிளிநொச்சியில் தொற்று பரவல்! கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை!!

கிளிநொச்சி, மே 08

கிளிநொச்சி மாவட்டத்தில் கோவிட் பரவல் மற்றும் ஸ்கந்தபுரம் கரும்பு தோட்ட காணி விடயம் உள்ளிட்ட விடயங்களை ஆராயும் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடந்தது.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் இதுவரை சமூக தொற்றாக மாற்றமடையவில்லை என்று தெரிவித்த மாவட்ட சுகாதார மருத்துவ பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன், சுமார் ஆயிரம் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

எனினும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் படைத்தரப்பினரின் ஒத்துழைப்புடன் கொரோனா தொற்றாளர்களுக்கான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்ட நிலையில், அனைத்து இடங்களிலும் சமகாலத்தில் மருத்துவ சேவையை மேற்கொள்வதற்கு ஆளணிப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், இதுதொடர்பாக சுகாதார திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

**அமைச்சர் தலைமையில் நேற்று கூட்டம்**



இதேபோன்று, போக்குவத்துக்களுக்கான வாகன வசதி போன்ற சில தேவைகள் தொடர்பாகவும் மருத்துவ அதிகாரியால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இவைதொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்திற்கான தேவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய கோரிக்கையை எழுத்து மூலம் தரும்படி கேட்டுக் கொண்டதுடன் அமைச்சரவையிலும் சுகாதார அமைச்சருடனும் கலந்துரையாடி தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றார்.

மேலும், கொரோனா பரவுவதை கட்டுப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தில் அரச அதிகாரிகள் அனைவரும் சுய பாதுகாப்புடன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்ட கடற்றொழில் அமைச்சர், நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுமாயின் உடனடியாக தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வருமாறும் தெரிவித்தார். (ஐ)

## ஈழத்து சபரிமலையில் சிறப்பு அபிஷேகம்!

யாழ்ப்பாணம், மே 08



இலங்கை, இந்திய மக்கள் கொரோனா வைரஸில் இருந்து சுபீட்சமான வாழ்வு பெறவும் மக்கள் பூரண நலம் பெற வேண்டியும் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகமும் பஜனையும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்பு அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் உயர் அதிகாரி கிருஷ்ணமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வு ஈழத்து சபரிமலை குருமுதல்வர் குருசாமி சிவஸ்ரீ கி. ஹரகரிசுத சிவாச்சாரியார் தலைமையில் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றி நடைபெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

## ஹெரோயினுடன் ஒருவர் மாட்டினார்

காத்தான்குடி, மே. 08

காத்தான்குடியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று மாலை காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து குறித்த இளைஞரைப் பொலிஸார் சுற்றிவளைத்து சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது அவரது உடமையில் இருந்து 70 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரைக் கைதுசெய்த பொலிஸார், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இளைஞரை துன்புறுத்தி காணொலி எடுத்தவர் வவுனியாவில் கைது!

வவுனியா, மே 08

வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரை துன்புறுத்திய குற்றச்சாட்டில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா ஆச்சிபுரத்தில் இளைஞர் ஒருவரை துன்புறுத்தி அவரை நிர்வாணமாக்கி காணொலியை பதிவுசெய்து சமூகவலைத்தளத்தில் பதிவேற்றினார் என்று கைது செய்யப்பட்ட நபர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் ஆச்சிபுரம் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Eelanadu
08.05.2021 சனிக்கிழமை
சார்வரி, சித்திரை 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் நாட்டை முடக்குதல்

கடந்த இரு வாரங்களாக கொரோனா தொற்றின் வேகம் அதிகரித்து வருவதாக பலரும் எச்சரித்து வருகின்றனர். தொற்று நோய் ஆய்வுப் பிரிவு பணிப்பாளரின் கருத்தின்படி, எதிர்வரும் காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை, நாளாந்தம் இரண்டு ஆயிரத்தை கடக்கலாம். உண்மையில் சில கணிப்புக்களின்படி, இலங்கையின் சனத்தொகையின் அளவோடு ஒப்பிட்டால், இந்தியாவை விடவும் இலங்கையில் தொற்று அதிகம். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், நாட்டை முடக்குமாறு பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையின் மருத்துவ சங்கம், நாட்டை முடக்குமாறு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் நாட்டை முடக்குவது தொடர்பில் வலியுறுத்தி வருகின்றது. ஆகக்குறைந்தது மாகாண மட்டத்திலாவது நாட்டை முடக்குவது அவசியமென்னும் கருத்தை எதிரணியினர் வலியுறுத்துகின்றனர். இல்லாவிட்டால், வரப்போகும் பேராபத்தை தடுக்க முடியாமல்போகலாம் என்பதே அவர்களின் வாதம்.

கொரோனா தொற்று முதன்முதலாக அடையாளம் காணப்பட்ட காலத்தில், நாடு முழுவதுமாக முடக்கப்பட்டது. இதன் விளைவாக கொரோனா தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்திவிட்டதான ஓர் அப்பிராயமும் அரசியல் மயமானது. ஆனால், தற்போது நிலைமைகள் தலைகீழாகிவிட்டன. அரசாங்கத்திற்கு ஆரம்பத்தில் கிடைத்த நற்பெயர் இப்போது இல்லை. ஆனால், நாட்டை முடக்காமலேயே, தாம் கொரோனாவை எதிர்த்து போராடப்போவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கொரோனா விவகாரம் ஆரம்பத்திலிருந்தே அரசியல் மயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டமொன்றின் வழியாகவே முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போதைய நிலைமையை உற்றுநோக்கும்போது, இந்த விடயத்தை அரசாங்கம் வேறு வழிகளில் கையாண்டிருக்கலாமோ என்னும் கேள்வி எழுகின்றது. இந்த இடத்தில் ரவூப் ஹக்கீம் பாராளுமன்ற விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயம் கவனிக்கத்தக்கது. நாடு நெருக்கடியை எதிர்நோக்கும்போது, அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின்கீழ், தேசிய சபையொன்றை உருவாக்கியிருக்கலாம். ஆனால், அவ்வாறு நிகழவில்லை என ஹக்கீம் சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஒரு தேசிய சபையை உருவாக்குவதற்கான கால அவகாசம் இப்போதும் உண்டு. ஏனெனில், இது அனைத்து தரப்பினரும் ஓரணியாக எதிர்கொள்ளவேண்டிய விவகாரம். ரோம் எரிந்துகொண்டிக்கும்போது, மன்னர் பிடில் வாசித்துக் கொண்டிருந்ததற்கு ஒப்பாக, அரசியல் தலைவர்கள் செயல்பட முடியாது.

தற்போதைய நிலையில், தடுப்பூசி விவகாரமும் மந்த கதியிலேயே நகர்கின்றது. இந்த விடயத்தை கையாளுவதற்கு அரசாங்கம் தனியார் துறையின் உதவியை பெறலாம். தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு தனியார் துறைக்கு அனுமதியளித்தால், வசிதியுள்ள மக்கள், தாங்களாகவே தடுப்பூசியை போட்டுக்கொள்வர். இதன்மூலம் அரசாங்கம் அதன் சுமையை குறைக்க முடியும். குறிப்பாக, தனியார் வைத்திய சாலைகளில் தடுப்பூசியை பெறக்கூடிய நிலையிருந்திருப்பின், மத்தியதர வர்க்கத்தினர் பெரும் தொகையானோர் எப்போதோ தடுப்பூசியை போட்டிருப்பர்.

நோய்த்தொற்று பரவலடைந்திருக்கும் நிலைமைய நோக்கினால், அது அதிகம் நகர்புறங்களாகவே இருக்கின்றன. மத்தியவர்க்கத்தினரே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஒருவேளை, தனியார் வைத்திய சாலைகளில் தடுப்பூசியை பெறக்கூடிய நிலையிருந்திருப்பின், இதனை தடுத்திருக்கலாம். இந்தளவிற்கு தொற்றும் பரவியிருக்காது. இப்போதும் காலம் கடந்துவிடவில்லை ஆனால், ஆலோசனைகளை உள்வாங்கி செயல்படக்கூடிய நிலையில் அரசாங்கம் இருக்கின்றதா என்பதுதான் இங்கு துருத்திக்கொண்டு மேலெழும் கேள்வி.

# முல்லைத்தீவில் மகாவலி!

- அலசுவது **இராஜதந்திரி** -

*இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, மகாவலி அதிகாரசபையினால் முல்லைத்தீவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் நில அபகரிப்பு நிறுத்தப்படும் என்று, அவரைச் சந்தித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார். இலங்கையின் மிக நீண்ட நதியாக மட்டுமல்ல. விக்டோரியா அணைத்திட்டத்தின் பூர்த்தியுடன் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் ஒரு மகா நதியாகவும் மகாவலி விளங்குகின்றது.*

*இலங்கையின் மத்திய மலைநாட்டில் உருப்பெறும் மகாவலி நதி அதன் கொள்ளளவிலுள்ள ஏராளமான நீரை கிழக்கே கடலில் வீணே விரயமாக்குவதை கருத்தில்கொண்டே, அதனை வடக்கு மாகாணம் உட்பட அந்த நதி பிரவாகமெடுத்துச்செல்லும் பிரதேசங்களை அண்டிய பிரதேசங்களுக்கும் திசை திருப்பும் நடவடிக்ககைகள் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னனெடுக்கப்பட்டன. ஆனால், வடபகுதி விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டதாகவும் அமைந்திருந்த மகாவலி அபிவிருத்தித்திட்டம், தற்போது புதிய குடியேற்றங்களை வடக்கே ஏற்படுத்தும் விதத்திலும் மாற்றியமைக்கப்பட்டு வருவதையே மகாவலியை மையமாகக் கோண்டு முல்லைத்தீவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள நில அபகரிப்பு நடவடிக்கை எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.*

*மகாவலியை மையப்படுத்தி முன்னெடுக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள புதிய முல்லைத்தீவு குடியேற்றங்களை நிறுத்தும்படி வடக்கு-கிழக்கின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைக்கே சாதகமான பதிலை முன்னாள் சபாநாயகரும் இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.*

**முல்லைத்தீவில் நில அபகரிப்பு**

*முல்லைத்தீவில் மகாவலி அதிகார சபையினால் புதிய குடியேற்றங்களுக்காக நில அபகரிப்பு மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது என இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மகாவலி நதி கிழக்கே பல பகுதிகளுக்கு திசைதிருப்பப்பட்டுள்ளது. இதன் காரணமாக பல புராதன தமிழ் கிராமங்களில் திட்டமிடப்பட்ட பல புதிய சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

**வடமுனை குடியேற்றம்**

*இக்குடியேற்றங்களில் முக்கியமானதே மட்டக்களப்பின் வடக்கே வடமுனைப் பகுதியில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட புதிய சிங்களக்குடியேற்றமாகும். கிழக்கே மேற்கொள்ளப்பட்ட வடமுனைக்குடியேற்றம் 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அச்சமயம் இக்குடியேற்றத்துக்கு எதிராக தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகள் குரலெழுப்பியபோதிலும் அரச இயந்திரம் முழுப் பலத்துடன் இக்குடியேற்றத்திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இதேவேளை, கிழக்கில் மகாவலி நதி திசைதிருப்பப்பட்ட இடங்களை நோக்கும்போது, விவசாய நடவடிக்கைகள் மிக விரிவான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

*பல புதிய ரக ஏற்றுமதிக்குரிய விவசாயப் பயிர்கள் பயிரிடப்பட்டு, அப்பயிர்களின் விளைச்சல்மூலம் விவசாயிகள் நல்ல பயன்களையும் பெற்றுவருவருகின்றனர்.*

**வானம் பார்த்த பூமி**

*எனவே, வடக்கே பல பகுதிகள் ‘வானம் பார்த்த பூமி’யாக மழையை நம்பி இருக்கின்ற நிலையில், மகாவலி நீரை வடபகுதிக்கு திசைதிருப்பும் பட்சத்தில் வடக்கேயுள்ள விவசாயிகளும் பெரும் பயனை அடைய முடியும். ஆனால், வடக்கே மகாவலி நீரை கொண்டுசெல்லும் விடயத்தில் மகாவலி அதிகார சபையின் போக்கு பாரபட்சமானதாக இருப்பதையே மகாவலியை மையப்படுத்தி முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த புதிய குடியேற்றத்திட்டங்கள் எடுத்துக்காட்டுபவையாக இருக்கின்றன. இத்தகைய பாரபட்சமான போக்கே இலங்கையில் இனப்பூசல்களுக்கு வழியமைத்துள்ளதுடன், ஆட்சியாளர்கள்மீது நம்பிக்கை இழக்கும் சூழ்நிலைகளையும் தோற்றுவித்துள்ளது.*

*வடக்கே முல்லைத்தீவு மாவட்டம் விவசாயம் மற்றும் மீன்பிடிக்குரிய பிரதேசமாக இருந்தவருகின்றது. இருந்தபோதிலும், மூன்று தசாப்தகால யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும், பதவியிலிருந்த ஆட்சியாளர்களினால் புறக்கணிக்கப்பட்ட பிரதேசமாகவும் முல்லைத்தீவு பிரதேசம் காணப்பட்டது.*

*இருந்தபோதிலும், மகாவலி நதியின் பிரவாகத்தினூடாக முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள மக்களின் நல்லெண்ணத்தைக்கட்டியெழுப்பி, அம்மக்களையும் தேசிய நீரோட்டத்தில் ஒரு சுபீட்சமான நிலைக்கு கொண்டுவருவதை விடுத்து, அம் மக்களை புண்படுத்தும் விதத்தில் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்துவது ஓர் ஆரோக்கியமான இன நல்லுறவுக்கு வழியமைப்பதாக இருக்க முடியாது.*

*முல்லைத்தீவு பிரதேசத்தில் மகாவலி நதி பிரவாகிக்கும் பட்சத்தில் அதனால் பயனடையப்போவது இந்த நாட்டு மக்களே என்று எண்ணுவதை விடுத்து, வடக்கின் தமிழ் மக்களே பயனடைவர் என்ற பாரபட்சமான கண்ணோட்டத்துடன் தெற்கேயிருந்து புதியவர்களை கொண்டுவந்து முல்லைத்தீவில் புதிய குடியேற்றங்களை உருவாக்கும் பட்சத்தில், இயற்கையோடிணைந்த மகாவலி நதி மூலமாகவும் இனவாதத்துக்கு தூபமிடப்படுகின்றதென்றே கருத முடியும்.* •

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 8 சனிக்கிழமை**
பிலவ வருடம் - சித்திரை - 25
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : துவாதசி




**மேடம்**
பணியாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். புது நட்பு மலரும். கற்பனை பயங்களால் கவலை ஏற்பட்டு பின் தெளிவாகும். பணியில் கவனம் தேவை. பணவரவு மகிழ்ச்சி அளிக்கும்.

**இடபம்**
அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த உதவிகளைப் பெறுவீர்கள். வாயைக் கொடுத்து யாரிடமும் மாட்டிக்கொள்ள வேண்டாம். மற்றவர்களுக்காக பிணை கையெழுத்துப் போடவேண்டாம்.

**மிதுனம்**
சலுகைகள் கிடைக்கும். மரியாதை கூடும். தடைகள் உடைபடும். சிறப்பான பலன்களை பெறுவீர்கள். வருமானம் உண்டு. குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். நிம்மதி வரும்

**கடகம்**
உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள். புதிய தொடர்பு கிடைக்கும். சிலருக்கு செரிமானக் கோளாறு வரலாம். பிறரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டால் சிக்கலில் மாட்ட நேரிடும்.

**சிம்மம்**
யாரையும் பகைக்காமல் அனுசரித்து செல்வது மிகவும் நல்லது. பணியாளர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வை பெற்று மகிழ்வீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் ஒற்றுமையாக செயல்படுவீர்கள்.

**கன்னி**
பணிச்சுமை குறையும். ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும். குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு திருமண முயற்சி கைகூடும். சகோதரர்களுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடு தீரும்.

**துலாம்**
குடும்பத்தில் இன்று கலகலப்பான சூழ்நிலை உருவாகும். செலவுகளைச் சமாளிக்கும் விதத்தில் பண வரவு இருக்கும். இன்று திடீர் உதவிகள் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**விருட்சிகம்**
உறவினரிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். எதிலுமே, தடைகளும் தாமதங்களும் இருந்து, பின் சரியாகும். புதிய வாகனம், வீடு வாங்கும் யோகம் உண்டாகும். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
கடன் விவகாரங்களில் மற்றவர்களுக்கு ஜாமீன் சொல்ல வேண்டாம். மனக்குழப்பம் சற்று அதிகரிக்கும். யாரிடமும் பகை வேண்டாம்.வழக்குகள் முடியாவிட்டாலும் அது வெற்றியை நோக்கிச் செல்லும்.

**மகரம்**
இழுபறியில் இருந்த பிரச்னை ஒன்று உங்கள் முற்சியால் தீரும். போராடித்தான் எதையும் சாதிக்க இயலும். பொறுமை தேவை. உள்ளத்திலும், குடும்பத்திலும் மெல்ல அமைதி அதிகரிக்கும்.

**கும்பம்**
அக்கம்பக்கத்துடன் இருந்த சச்சரவு மறைந்து புரிதல் வரும். கையிருப்பு குறையக்கூடும். பொழுது போக்கில் கவனம் செல்லும். பிரபலமான மனிதர்களின் ஆதரவும், நட்பும் கிடைக்கும்.

**மீனம்**
ஒரு திட்டத்தைச் செய்யலாமா வேண்டாமா எனக் குழம்புவீர்கள். உங்களுக்குத் தீங்கு நினைப்பவர் உங்களை விட்டு விலகுவர். பல நாள் சந்திக்காத நட்புகளின் சந்திப்பு நிகழ்ந்து மகிழ்ச்சி தரும்.

# முதல்வராக பதவியேற்றார் ஸ்டாலின் அமைச்சரவையும் பதவியேற்றது

சென்னை, மே 08

**தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் முதலமைச்சராக நேற்று சென்னை ஆளுநர் மாளிகையில் நடந்த எளிமையான நிகழ்வில் பதவி யேற்றுக் கொண்டார். அவருக்கு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.**




நேற்று காலை 9.10 அளவில், "முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்..." என்று தொடங்கி பதவி ஏற்பு உறுதிமொழியை எடுத்துக் கொண்டார் ஸ்டாலின். பதவி ஏற்பு உறுதி மொழியையும் இரகசிய காப்பு பிரமாணத்தையும் "உளமாற" என்று கூறி மேற்கொண்டார் ஸ்டாலின்.

ஸ்டாலின் பதவியேற்ற அந்த நொடியில் பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்த அவரது மனைவி துர்கா ஸ்டாலின் திடீரெனக் கண்கலங்கி ஆனந்தக் கண்ணீர் விட்டார். அவரோடு உதயநிதி, மருமகன் சபரீசன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கலந்து கொண்டிருந்தனர்.

தி.மு.கவில்பேரறிஞர்அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரை அடுத்து மூன்றாவது முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றுள்ளார்.

ஸ்டாலினைத் தொடர்ந்து தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன்(நீர்வளம்), க.பொன்முடி (உயர் கல்வி), ஐ.பெரியசாமி, கே.என்.நேரு, எ.வ.வேலு (பொதுப்பணி, நெடுஞ்சாலை), எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, சு.முத்துசாமி, கே.ஆர்.பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன், வெள்ளக்கோவில் மு.பெ.சுவாமிநாதன், வி.கீதா ஜீவன், 'அனிதா' ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், க.ராமச்சந்திரன், அர.சக்கரபாணி (உணவு), வி.செந்தில் பாலாஜி (மின்சாரம்), ராணிப்பேட்டை ஆர்.காந்தி (கைத்தறி, துணி நூல்), மா.சுப்ரமணியன் (மக்கள் நல்வாழ்வு), பெ.மூர்த்தி (வணிகவரி, பதிவு), எஸ்.எஸ்.சிவசங்கர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்). பி.கே.சேகர் பாபு (இந்து அறநிலையம்), பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் (நிதி, மனித வளம்), சா.மு.நாசர் (பால் வளம்), 'அன்பில்' மகேஷ் பொய்யாமொழி (பள்ளிக்கல்வி), சிவ.வீ.மெய்யநாதன் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம்), சி.வே.கணேசன் (தொழிலாளர் நலம்), த.மனோ தங்கராஜ் (தகவல் தொழில்நுட்பம்), செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ( சிறுபான்மையினர் நலன்) மா.மதிவேந்தன் (சுற்றுலா), என்.கயல்விழி செல்வராஜ் (ஆதிதிராவிடர் நலம்) ஆகியோர் அமைச்சராகப் பதவி யேற்று உறுதி மொழிந்தனர்.

கடந்த அதிமுக ஆட்சியின் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், பாமக தலைவர் ஜி.கே.மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ. உள்ளிட்டோர் நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தோல்விக்கு பின்பும் கமல் தனது அணுகுமுறையை மாற்றவில்லை

## பதவி விலகும் துணைத் தலைவர் மகேந்திரன் தாக்கு



சென்னை, மே 08

மக்கள் நீதி மய்யம் கட்சியில் இருந்து டாக்டர் மகேந்திரன், மவுரியா, சி.கே.குமரவேல் என முக்கிய நிர்வாகிகள் பலரும் விலகியுள்ளனர். "இவ்வளவு பெரிய தோல்விக்குப் பிறகும் கமல் தனது அணுகுமுறையை மாற்றிக் கொள்ளவில்லை' என விலகல் கடிதத்தில் மகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் மகேந்திரன், நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் சிங்காநல்லூர் தொகுதியில் போட்டியிட்டார். இங்கு அவருக்கு 36,855 வாக்குகள் கிடைத்தன.

இது தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்ட மகேந்திரன், "எங்களுக்குக் கிடைத்த ஒவ்வொரு வாக்குகளும் நேர்மையானவை என்பதில் பெருமிதம் கொள்கிறேன். தேர்தலோடு முடிந்து விடுவதில்லை நமது அரசியல். மக்கள் நலனுக்காகவும் தமிழக நலனுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டே இருப்பேன்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், மக்கள் நீதி மய்யத்தில் இருந்து விலகுவது தொடர்பாக நேற்று முன்தினம் அக்கட்சியின் தலைவர் கமலிடம் மகேந்திரன் நேரில் கடிதம் கொடுத்துள்ளார். அவரது விலகல் கடிதம் ஏற்கப்பட்டது தொடர்பாக ம.நீ.ம. தலைமைக் கழகத்தில் இருந்து அதிகாரபூர்வ அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

இதற்கிடையே, மகேந்திரனின் விலகல் மற்றும் ராஜினாமா தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டிக்கு பின்னர், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"களத்தில் எதிரிகளோடு துரோகிகளும் கலந்திருந்தார்கள் என்பதைக் கண்கூடாகக் கண்டோம். துரோகிகளைக் களையெடுங்கள் என்பதுதான் அனைவரின் ஒருமித்த குரலாக இருந்தது. அப்படிக் களைய வேண்டியவர்களின் பட்டியலில் முதல் நபராக இருந்தவர் டாக்டர் ஆர். மகேந்திரன்" என கமல்ஹாசன் தெரிவித்திருக்கின்றார்.

# 'ஆட்டோகிராப்' புகழ் கோமகன் மரணம்



சென்னை, மே 08

மாற்றுத்திறனாளியான பின்னணி பாடகர் கோமகன், வயது- 48, கொரோனா தொற்றால் காலமானார்.

நாகர்கோவிலைச் சேர்ந்த கோமகன், தமிழக அரசின், 2019ஆம் ஆண்டுக்கான, 'கலைமாமணி' விருது பெற்றவர். கொரோனா தொற்றால், சென்னையிலுள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலமானார். இயக்குனர் சேரனின், 'ஆட்டோகிராப் படத்தில் இடம் பெற்ற, 'ஒவ்வொரு பூக்களுமே...' என்ற பாடல் வாயிலாக, சினிமாவில் பிரபலமானார்.

## மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள்

# யாழ்ப்பாண மக்களே மிகவும் அவதானம்!




### எச்சரிக்கின்றார் யாழ். அரச அதிபர்

**யாழ்ப்பாணம், மே. 08**

**யாழ்ப்பாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் காணப்படுவதனால் பொதுமக்கள் அவதானமாக செயல்படவேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.**

**யாழ்.மாவட்ட தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலைமை சற்று அதிகரித்த நிலை காணப்படுகின்றது

நேற்று முன் தினம் 20 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் 1688 நபர்கள் யாழ். மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 21 மரணங்கள் யாழ்.குடாநாட்டில் பதிவாகியுள்ளன.

இதனை விட தற்போது இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 475 குடும்பங்களை சேர்ந்த 2,261 நபர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பகுதியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளோருக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய நிலையில் அனைத்து நடவடிக்கைகளையும் மட்டுப்படுத்திய அளவிலும் சில விடயங்களுக்கு தடை விதித்தும் இருக்கின்றோம்.

தற்போது பொலிஸார் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மக்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பாரிய அளவில் அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே. பொதுமக்கள் கண்டிப்பாக சுகாதார வழிகாட்டலைப் பின்பற்றி தமது செயல்களை செயற்படுத்தவேண்டும்.

பொதுமக்கள் இந்த விடயங்களுக்கு ஒத்துழைத்தால் யாழ். மாவட்டத்தை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை சில முன்னேற்ற நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

ஏற்கனவே, கோப்பாய் மற்றும் கிளிநொச்சியில் இருந்த இரண்டு சிகிச்சை நிலையங்களுக்கு மேலதிகமாக மேலும் சில சிகிச்சை நிலையங்களைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கிளிநொச்சியிலும் 230 கட்டில்களுடன் ஒரு சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்துள்ளோம். அத்தோடு மருத்துவமனைகளையும் சிகிச்சை நிலையங்களாக மாற்றியமைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் அவசர சிகிச்சைக்குரிய கட்டில்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளன. எனவே அதனையும் அதிகரிப்பதற்குரிய நடவடிக்கையினை சுகாதாரப் பிரிவினர் எடுத்துள்ளார்கள்.

எனவே மட்டுப்படுத்தப்பட்ட வைத்திய வசதிகள் காணப்படுவதன் காரணமாக பொதுமக்கள் மிக அவதானமாக நடந்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது - என்றார்.

(அ-3)

# அநாவசியமாக நகருக்கு செல்வதை தவிருங்கள்!

## மன்னார் மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை




மன்னார், மே. 08

மன்னார் மாவட்டத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மேலும் 7 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மக்கள் மன்னார் நகர் பகுதிக்கு தேவை இல்லாமல் வருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதத்தை விட இம்மாதம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பீ. சி.ஆர்.பரிசோதனைகளின்போது நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேலும் 7 கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களின் 3 நபர்கள் ஏற்கனவே தனிமைப் படுத்தப்பட்டவர்கள்.

ஏனையவர்களில் 3 நபர்கள் மன்னார் நகர்ப் பகுதியில் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றியவர்கள். ஏனைய ஒருவர் ஆசிரியராக அண்மையில் கொழும்புக்கு சென்று வந்தவராக காணப்படுகின்றார்.

இந்த மாதம் முதல் ஆறு நாட் களில் 13 தொற்றாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 21 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர். இந்த வருடம் 355 கொரோனா தொற்றாளர்களும், மொத்தமாக 372 தொற்றாளர் களும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

கடந்த 6 நாட்களில் மன்னார் மாவட்டத்தில் 590 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள நிலையில்,120 பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெறவில்லை.

இதுவரை மன்னார் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 530 பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளோம். மக்களிடம் அவரச கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். இந்த மாதம் முக்கிய தீர்மானமிக்க மாதமாக உள்ளது.

மக்கள் கடுமையான சுகாதார நடைமுறைகளை எவருடைய கண்காணிப்பும் இன்றி சுயமாக கடைபிடிக்க வேண்டும்.

மன்னார் நகர் பகுதிக்கு மக்கள் தேவை இல்லாமல் வருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொது போக்கு வரத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உணவகங்களில் அமர்ந்து சாப்பிடுதல்,கூடி நின்று கதைத்தல் போன்ற செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். தமது தேவைகள் முடிவடைந்த உடன் வீடுகளுக்குச் செல்லுங்கள்.

உணவக உரிமையாளர்கள் ஏற்கனவே சுகாதார தரப்பினரால் அறிவுறுத்தப் பட்டமைக்கு அமைவாக அங்கிகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் வாடிக்கையாளர்களை மாத்திரம் உணவகங்களினுள் வைத்திருக்க முடியும்.

குறித்த பிரச்னை நீண்ட காலத்திற்கு இருக்கும் என்பதால் மக்கள் வீடுகளில் இருந்து உணவு, ஏனைய பொருட்களை பெற்றுக்கொள்ளுவதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தினால் சாலச் சிறந்தது.

ஏனைய நிறுவனங்களும் மக்களை தமது அலுவலகங்களுக்கு அழைக்காது மக்களின் இடங்களுக்கு இணைய வழியாகவே அல்லது நேரடியாகவே சென்று சேவைகளை வழங்கக்கூடிய பொறிமுறைகளை ஏற்படுத்துவது சிறந்தது.

இந்தியாவில் இருந்து தலைமன்னார் பகுதிக்கு சட்ட விரோதமான முறையில் கடந்த 10 நாட்களுக்கு முன்னர் வருகை தந்த நிலையில் கைது செய்யப்பட்ட 2 நபர்களும், அவர்களை அழைத்து வந்தவர்கள் என 3 நபர்களுக்கு இரணை தீவு பகுதியில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து வருகை தந்தவர்களில் ஒருவர் ஏற்கனவே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில்,சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய 3 நபர்களுக்கும் பி. சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கடற்படையினர் மற்றும் பொலிஸார் உற்பட குறித்த 21 பேருக்கும் இவர்கள் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இரணைதீவுப் பகுதியில் குறித்த பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பரிசோதனை மாதிரிகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதனை மேற்கொண்டு முடிவுகள் அறிவிக்கப்படும்- என்றார்.



# மன்னாரில் 100 படுக்கைகளுடன் கொரோனா சிகிச்சை நிலையம்!

மன்னார், மே. 08

மன்னார் மாவட்டத்தில் ஒரேநேரத்தில் நூறு கொரோனா நோயாளர்களை அனுமதித்துச் சிகிச்சை வழங்குவதற்கான விசேட சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்காக, மன்னார் தாராபுரம் பகுதியில் அமைந்துள்ள துருக்கி சிற்றி பாடசாலையை மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப்பேற்றுள்ளார்.

இதையடுத்து, குறித்த பாடசாலையை இராணுவத்தின் உதவியுடன் கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த சிகிச்சை நிலையத்தில் மன்னார் சுகாதாரத் துறையினர் சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இதுவேளை, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையிலான குழுவினர் நேற்று அந்த சிகிச்சை நிலையத்தின் பணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் உள்ள சிகிச்சை நிலையங்களிலேயே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லியடியில் முகக் கவசம் அணியாத எட்டு வர்த்தகர்கள் தனிமைப்படுத்தல்

வடமராட்சி, மே 7

நெல்லியடி நகரத்தில் முகக்கவசம் அணியாத 8 வர்த்தகர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.செந்தூரன் தலைமையில் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு நெல்லியடி நகரப்பகுதி வர்த்தக நிலையங்களில் கொரோனா சுகாதார வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பது பற்றி ஆராய்தபோது 8 வர்த்தகர்கள் முகக்கவசங்களை அணியாமல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து 8 வர்த்தர்களுக்கும் தனிமைப்படுத்தப் படுத்தல் உத்தரவு வழங்கப்பட்டது. (அ-02)

# மாகாண மட்டத்திலாவது பொதுமுடக்கம் அவசியம்

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, மே08

**கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. எனவே, முழு நாட்டையும் முடக்க முடியாவிட்டால் குறைந்த பட்சம் மாகாண மட்டத்திலாவது உடன் முடக்க நடைமுறையைப் பின்பற்றுங்கள் என அரசிடம் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு புறத்தில் எதிரணி உறுப்பினர்களை அரசியல் ரீதியில் வேட்டையாடிக்கொண்டு, மறு புறத்தில் எதிரணியினரின் ஒத்துழைப்பு அவசியம் என அமைச்சர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயார். அது பற்றி கலந்துரையாடுவதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும்.

கொரோனாவிவகாரம்தொடர்பில் வைத்தியர்கள், துறைசார் நிபுணர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று அரசு எடுக்கும் முடிவுகளை நாம் ஆதரிப்போம். ஆனால், அர சியலை இலக்காகக்கொண்டு எடுக்கப்படும் முடிவுகளை ஆத ரிக்க முடியாது.

நாட்டை முடக்குவது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மூன்று மாதங்களாகக் கதைத்து வருகின்றார். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கொரோனா வைரஸ் தொற்று தற்போது வேகமாகப் பரவி வருகின்றது. முழு நாட்டையும் முடக்க முடியாவிட்டால், மாகாண மட்டத்திலாவது கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கொரோனாவைரஸ்பரவலைக் கட்டுப்படுத்துவதில்அரசு தோல்வி கண்டுள்ளது. இதனை ஏற்க வேண்டும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூட கொரோனா விடயத்தில் தாம் தோல்வி என்பதை ஒப்புக்கொண்டுள்ளார் -என்றார்.



# ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் மூவர் கைது

கொழும்பு, மே. 08

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு கோடிக்கு அதிக பெறுமதியுடைய 2 இலட்சத்து 12,000 சிகரெட்டுக்களுடன் சந்தேகநபர்கள் மூவரை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 43, 42 மற்றும் 49 வயதுடைய, தெமட்டகொடை பிரதேசத்தைச்சேர்ந்தவர்கள்என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கண்டறியும் நடவடிக்கையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

# வீதியால் சென்ற பெண்ணை தள்ளிவிட்டு சங்கிலி அறுப்பு!

## கரவெட்டி இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே. 08

வடமராட்சி, பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியால் சென்ற பெண்ணை தள்ளிவிட்டு அணிந்திருந் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய இருவரில் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 4ஆம் குறுக்குத் தெரு வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இருவர், அந்தப் பெண்ணை தள்ளிவிழுத்திவிட்டு அவர் அணிந்திருந்த ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றிருந்தனர்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை பொலிஸார் கரவெட்டியை சேர்ந்த 24 வயது இளைஞரை கைது செய்துள்ளனர்.

சங்கிலி அறுப்பு சம்பவத்தில் ஈடுபட்டிருந்த மற்றவரை கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பருத்தித் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

# மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தல்

கொழும்பு, மே. 08

நாட்டின் மேலும் சில பகுதிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் அமுலாகும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினால் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஹல்புத்த, கெஸ்பேவ கிழக்கு, மாகந்தர மேற்கு, பெல்ஹேன மற்றும் நிவுன்கம கிராம சேவகர் பிரிவுகள்,

களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிம்புர கிராம சேவகர் பிரிவு மற்றும் மதுகம பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட யட்டியான மேற்கு கிராம சேவகர் பிரிவு,

கம்பஹா மாவட்டத்தின் கடவத்த பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எல்தெனிய கிழக்கு, சூரியபாலுவ மேற்கு, சூரியபாலுவ வடக்கு, பஹல கரகஹமுன வடக்கு மற்றும் இஹல கரகஹமுன வடக்கு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளிட்ட பகுதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.



# மட்டக்களப்பில் விபத்து; இருவர் நேற்று உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே. 08

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் மியான்குளம் சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் மியான்குளம் சந்தியில் அதிவேகமாக பயணித்ததில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதில் மட்டக்களப்பு ஞான சூரியம் சதுக்க வீதியில் வசிக்கும் பரமேஸ்வரன் தனுஜன்(வயது-31), தெஹிவளை, ஹோட் வீதியில் வசிக்கும் துரைசிங்கம் வினோகா ஆகிய இருவருமே உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த இருவரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்விபத்துச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# தடுப்பூசி ஏற்றியவர்களுக்கும் தொற்று ஏற்படும் வாய்ப்புகள்

கொழும்பு, மே. 08

நாட்டில் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்படகூடிய வாய்ப்புகள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்தார். இதன்காரணமாக அவர்கள் முறையான சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றவேண்டியது மிகவும் அவசியமாகுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# புதிய சட்டமா அதிபராக சஞ்சய் ராஜரட்ணம்?

## பாராளுமன்றப் பேரவை பரிசீலனை

கொழும்பு, மே. 08



பதில் சொலிசிட்டர் ஜெனரல் சஞ்சய் ராஜரட்ணத்தை புதிய சட்ட மா அதிபராக நியமிக்க பாராளுமன்ற பேரவையினால் பரிசீலிக்கப்பட்டது என்று அதன் தலைவர் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

சட்ட மா அதிபர் பதவிக்கு பதில் சொலிசிட்டர் ஜெனரல் சஞ்சய் ராஜரட்ணத்தின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் அடுத்த வாரம் நடைபெறும் பாராளுமன்றப் பேரவையில் அவரது பரிந்துரை பரிசீலிக்கப்படும் என்று சபாநாயகர் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா மே 20 ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

வெற்றிடமாகும் சட்ட மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரட்ணத்தின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது.

சஞ்சய் ராஜரட்ணம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மிக மூத்த அதிகாரியாக உள்ளார்.

# அரச, தனியார் நிறுவனங்களில் அவசியம் இல்லாத நிகழ்வுகள்

## உடன் நிறுத்துமாறு வலியுறுத்தல்

கொழும்பு, மே. 08

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் அவசியமற்ற நிகழ்வுகள் நடத்தப்படுவது குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய இதனைக் குறிப்பிட்டார்.

சில நிறுவனங்களில் நிகழ்வுகள் நடத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களில் பலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அரச மற்றும்தனியார்நிறுவனங்களில் அவசியமற்ற நிகழ்வுகளை நடத்துவதை தவிர்க்குமாறும் அவர் வலிறுத்தியுள்ளார்.



# முடங்கியது திருமலை நகரம்!

திருமலை, மே. 08

திருகோணமலை மாவட்டத்தில் அதிக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து பல கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், திருகோணமலை நகர்ப் பகுதியில் மருந்தகங்கள், அத்தியாவசியத் தேவைகளுக்கான பொருட்கள் விற்பனைகள் தவிர்ந்த அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன.

இதனால், திருகோணமலை மாவட்டத்தின் நகர்ப் பகுதி, கந்தளாய், மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. இதேவேளை, திருகோணமலை நகரமானது முற்றாக முடக்கப்படும் என்ற வதந்தி சமூக ஊடகங்களில் பரவி வந்ததால் மக்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

### கிளிநொச்சியை மிரட்டும் கொரோனா

# பொலிஸார் 24 பேருக்கு நேற்று தொற்று உறுதி!

கிளிநொச்சி, மே 08

**கிளிநொச்சியில் கொரோனா தீவிரமாக சமூக்தில் பரவி வருவதாக எச்சரிக்கப்பட்டுவரும் சூழலில் நேற்று காலை வெளியாகிய பொலிஸார் குறித்த பரிசோதனைத் தகவல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.**

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மற்றும் அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸாருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று காலை வெளியாகின.

அவற்றின் அடிப்படையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் 22 பேருக்கும் அக்கராயன் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு நோய் அறிகுறிகளுடன் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு சிகிச்சைக்காக சென்ற மக்கள் 10 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்களின் தொடராகவேனும் மக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.



# யாழ்.நகரில் சைக்கிள்கள் திருடிய ஒருவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், மே. 08

யாழ்ப்பாணம் மாநகரில் சைக்கிள்களைத் திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 14 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு தெரிவித்தது.

சைக்கிள்கள் திருட்டு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் குருநகரைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான குற்றத் தடுப்பு பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

# 20 இலட்சம் ‘பேஸ்புக்’ கணக்குகளை இலங்கையில் முடக்க நடவடிக்கை!

கொழும்பு, மே. 08

இலங்கையில் மொத்த ‘பேஸ்புக்’ கணக்குகளில் சரியான உரிமையாளர்களைக் கொண்டிராத சுமார் 20 இலட்சம் கணக்குகளை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான சட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், குறித்த கணக்குகளை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதற்கான அரச கட்டமைப்பிலுள்ள நிறுவனங்களின் ஊடாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதுடன் அமைச்சர் அலி சப்ரியும் தானும் இணைந்து அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இதற்கு அனுமதி கிடைத்தவுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு, உரிமையாளர்கள் இல்லாத பேஸ்புக் கணக்குகள் மூலம் பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் இனவாதங்களைத் தூண்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

அத்துடன், இளையோரைச் சீரழிக்கும் சமூக விரோதச் செயற்பாடுகளைத் தூண்டுவதற்கும் இதுபோன்ற பேஸ்புக் கணக்குகள் வழிவகுப்பதாக கண்காணிக்கப்பட்டுள்ளதாக கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதன்படி, தேசிய பாதுகாப்பையும் சிறந்த சமூகக் கட்டமைப்பையும் வழிநடத்தும் வகையில் இந்தத் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# அனைத்து பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை பூட்டு!

கொழும்பு, மே. 08

கொரோனா பரவலின் தீவிரம் காரணமாக நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியனவற்றை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அதிகரித்து வரும் கோவிட்-19 பரவல் நிலையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மேலதிக வகுப்புகளை நடத்துவதற்கும் மறு அறிவித்தல் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.



# பருத்தித்துறை - அல்வாய் வீதியில் மோட்டார் சைக்கிளுக்கு தீ வைப்பு!



யாழ்ப்பாணம், மே. 08

வடமராட்சி பருத்தித்துறை - அல்வாய் பகுதியில் வீதியால் சென்றவர்களை வழிமறித்த கும்பல் அவர்களை விரட்டியடித்துவிட்டு மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்துள்ளது.

வடமராட்சி, பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது அல்வாய் சிறிலங்கா பாடசாலைக்கு அருகாமையில் வைத்து வழிமறித்த கும்பல் மோட்டார்சைக்கிளை பறித்து அதில் வந்தவர்களை விரட்டியடித்துள்ளது.

அதன் பின்னர் அவ்விடத்திலேயே குறித்த மோட்டார் சைக்கிளுக்கு தீவைத்த கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவத்தில் தீ வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பருத்தித்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான முன்பகை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (அ-2-3)

# அசைக்கமுடியாத கழகங்கள் 'மாற்று அணி' களின் நிலை என்ன?

நியூசிலாந்து சிற்சபேசன்



இரண்டு கழகங்களுக்கும் மாற்று என்கின்ற சிந்தனை தொடர்ச்சியாக சுழல்கிறது. அதனாலேயே டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி, வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம் போன்ற கட்சிகள் வெவ்வேறு காலங்களில் எழுச்சியடைந்தன. ஆனாலும் மூன்றாவது சக்தியாக பரிணமிக்கமுடியவில்லை.

தமிழக சட்டமன்றத் தேர்தல் தெளிவான முடிவை வெளிப் படுத்தியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணிக்கு தனித்துவமான வெற்றி கிடைத் திருக்கின்றது. 126 தொகுதிகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து வெற்றி பெற்றிருக்கின்றது. அதனால் தனிப்பெரும்பான்மையுடனான ஆட்சியை அமைத்திருக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதயசூரியன் சின்னத்தில் களமிறங்கிய கூட்டணிக் கட்சிகளான மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம், மனிதநேய மக்கள் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி ஆகியவற்றின் வெற்றிகளையும் சேர்த்துக் கொள்ளும்போது திராவிட முன்னேற் றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கை 133 ஆக உயர் கின்றது. அத்துடன் கூட்டணியின் பிற கட்சிகளான காங்கிரசின் 18 தொகுதி கள், விடுதலைச் சிறுத்தைகளின் நான்கு தொகுதிகள், மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் பெற்ற நான்கு தொகுதிகளுமாக திராவிட முன்னேற்றக்கழகக் கூட்ட ணியின் சட்டமன்றப் பலம் 159 ஆகின்றது.

சென்னை, தென்மாவட்டங் கள் மற் றும் டெல்டாப்பகுதியில் திராவிட முன் னேற்றக் கழகக் கூட்டணி கணிசமான தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. டெல்டாப் பகுதியில் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் மொத்தமுள்ள 18 சட்டமன்றத் தொகுதிகளில் 15 தொகுதிகளைக் கைப்பற்றியிருக்கின்றது.

மறுவளத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை இழந்திருக்கின்றது. அதனுடைய கூட்டணி 75 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கின்றது. அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 66 தொகுதிகளிலும், பாட்டாளி மக்கள் கட்சி ஐந்து தொகுதிகளிலும், பாரதிய ஜனதாக் கட்சி நான்கு தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

2021 சட்டமன்றத் தேர்தலிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு அப்பால், மேலதிகமாக இரண்டு சவால்களுக்கு முகங்கொடுத்தது. அதிலே ஒன்று, கட்சி யைக் கைப்பற்றுவது தொடர்பிலான சசிகலாவின் நடவடிக்கைகளும், பாரதிய ஜனதாக் கட்சியின் ஆதிக்கநோக்கம் கொண்ட அழுத்தங்களுமாகும். மற்றையது, கட்சி நிலைத்திருக்குமா என்பது தொடர் பில் பரவலாகக் காணப்பட்ட பீதியாகும். எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற வானுயர்ந்த பிம்பங்களின்றி இரட்டை இலை வாடிவிடுமோ என்னும் அச்சம் பூதாகரமானதாகக் காணப்பட்டது. இத்தகையதொரு சூழலிலே, ஆட்சியை இழந்தபோதிலும், கட்சி எதிர் கொண்ட இரண்டு பாரிய சவால்களை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி கொண்டி ருக்கின்றது. கட்சி வெற்றியடைந்த தொகுதிகளின் எண்ணிக்கையும், மறுவளத்தில் டிடிவி தினகரனுக்கு கிடைத்த படுதோல்வியும் சசிகலாவின் அரசியலுக்கு அநேகமாக முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றது. அத்தோடு, ஜெயலிதாவுக்குப் பின்னர் கட்சி இருக்காது என்று சொன்னவர்களுக்கு 66 தொகுதிகளிலே பெற்ற வெற்றியையே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பதிலாகச் சொல்லியிருக்கின்றது.

சேலம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 11 தொகுதி களில் 10 தொகுதிகளில் அண்ணா திராவிட முன்னேற் றக் கழகம் வெற்றிபெற்றுள் ளது. கோவை மாவட்டத் தில் மொத்தமுள்ள 10 தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளது. அந்தவகையிலே, கொங்கு மண்டலத்தில் மொத்தமுள்ள 50 சட்டமன்றத் தொகுதிகளில் 33 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. அதேசமயத்தில் தென் மாவட்டங்களிலே கணிசமான பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தலுக்கு முன்னர் வன்னியர்களுக்கு 10.5 சதவிகித இடஒதுக்கீட்டை அறிவித்தது. அது வட மாவட்டங்களில் நல்ல பெறுபேறுகளை ஏற்படுத்தியது. அதேவேளையில் தென் மாவட்டங்களில், எம்.பி.சி. பட்டியலில் மீதமிருக்கும் சிறுசிறு சமுதாயத்தினரின் அதிருப்தியை அதிகரித்துவிட்டது. அத்துடன் தேவேந்திரகுல வேளாளர்கள் பொதுப் பெயர் அறிவிப் பும் குறிப்பிட்ட சமுதாயத்தினரிடம் அதிருப்தியை ஏற்படுத்திவிட்டது. வெள்ளாளர்கள் என அழைக்கப்படும் பிற சமூகத்தினரின் முழு எதிர்ப்பையும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்கொள் கின்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது இவ்வாறான சவால்களிடையே, தென்மாவட்டங்களிலே மூன்றில் ஒருபங்கு தொகுதிகளிலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற முடிந்திருக்கின்றது.

கடந்த அரை நூற்றாண்டாக தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் வல்லமை கொண்ட கட்சிகளாக திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமுமே காணப்படுகின்றன. மூன்றாவது கட்சியொன்றின் தேவை தொடர்ச்சியாகக் காணப்படு கின்றது. இரண்டு கழகங்களுக்கும் மாற்று என்கின்ற சிந்தனை தொடர்ச்சியாகச் சுழல்கிறது.

அதனாலேயே டாக்டர் இராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி, வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விஜயகாந்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம் போன்ற கட்சிகள் வெவ்வேறு காலங்களில் எழுச்சியடைந் தன. ஆனாலும் மூன்றாவது சக்தியாக பரிணமிக்க முடியவில்லை. தேர்தல் அரசியலில் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, ஏதோவொரு கழகத்தின் முதுகில் சவாரிக்கு ஏறுவதே, முன்பு எழுச்சியடைவதாகப் பிலிம் காட்டிய கட்சிகளின் வாடிக்கையாகிவிட்டது.

அந்த வகையிலேயே, தற் போது சீமானின் நாம் தமிழர் கட்சி, கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம், டிடிவி தினகர னின் அம்மா மக்கள் முன்னேற் றக் கழகம் என்பவற்றின் சலசலப்புக்களையும் காண முடிகின்றது.

சீமானின் முன்மொழிவு களில் அநேகமானவை நடைமுறைக்கு அப்பாற்பட்டவையாகவே காணப்படுகின் றன. அத்துடன், தமிழகச் சூழலிலே, அதீத போக்கை வெளிப்படுத்துவனவாக வும் கருதப்படுகின்றன. 'அரசியலைப் பகுதிநேரப் பணியாகக் கருதுவதே நல்லது' என்று வெளிப்படையாக பேசுகின்ற கமல்ஹாசனை மூன்றாவது சக்தியாக சித்தரித்ததே ஒருவகையான சினி மாத்தனமாகும். மாநிலம் தழுவிய பிரச் சாரத்தைக் கமல்ஹாசனால் மேற்கொள்ள முடியவில்லை. முதலமைச்சர் வேட்பாளர் என அடையாளப்படுத்திகொண்ட ஒருவர் தன்னுடைய சொந்த தொகுதியிலேயே முடங்கிப்போனமையைக் காணமுடிந்தது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தோற்றமே ஒருவகையில் விபத்தாகும். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர், கட்சியை சசிகலா கைப்பற்ற மேற்கொண்ட முயற்சியின் தோல்வியே அதற்குக் காரண மாகும். சசிகலா சிறையிலிருந்தபோது, அரசியலில் சலசலப்பை ஏற்படுத்துவதிலேயே டிடிவி தினகரனின் கவனம் குவிந்திருந்தது.

சிறையிலிருந்து விடுதலையான பின்னர், சசிகலா அரசியலுக்கு வருவார் என்பதே டிடிவி தினகரனின் வஜ்ராயுதமாகக் காணப்பட்டது. ஆனால், தேர்தல் நெருங்குகின்ற வேளையில் அரசியலிலிருந்து விலகுவதாக சசிகலா அறிவித்தார். அது டிடிவி தினகரனைப் பத்மவியூகத்தில் சிக்கவைத்துவிட்டது. அதனாலேயோ என்னவோ, டிடிவி தினகரனின் அரசியல் அறிவிக்கப்படாத ஒரு சாதிக் கட்சியாகவே தேர்தல் களத்தில் பரிதவித்தது.

2.4 சதவிகித வாக்கு களை மட்டுமே அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தி னால் பெறமுடிந்தது. 2019 பாராளுமன்றத் தேர்தலில் 5 சதவிகித வாக்குகளோடு எதிர்பார்ப்பை ஏற்படுத்திய கட்சியினால், 2021 சட்டமன்றத் தேர்தலில் எந்தவித விளைவுகளையும் ஏற்படுத்த முடியவில்லை. கோவில் பட்டி தொகுதியில் தினகரனும் தோல்வியடைந்தார்.

ஆக, இரண்டு கழகங்களுக்கு வெளியேயிருந்து தேர்தலில் போட்டியிட்ட மூன்று சிறு கட்சிகளினாலும் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெறமுடியவில்லை. அத்தோடு வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கும் வாக்கு வித்தியாசங்களைக்கூடப் பெறமுடியவில்லை. அந்தவகையிலே, இரண்டு கழகங்களுமே தமிழகத்தின் அசைக்கமுடியாத அரசியல் சக்திகள் என்பதையே 2021 சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் சொல்லுகின்றன.

# தமிழின அழிப்பு அறிவியல் கிழமை பிரகடனம்

# ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலம்



## விஜய் தணிகாசலத்தின் முயற்சிக்கு கிடைத்த பலன்

கனடா, ஒன்ராறியோ மாநில றூஜ் பார்க் தொகுதிக்கான சட்டமன்றத்தின் உறுப்பினர் விஜய் தணிகாசலம், ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை தமிழின அழிப்பு தொடர்பான அறிவியற் கிழமைக்கான சட்டமூலத்தை மூன்றாவது வாசிப்புக்கு கொண்டுவந்திருந்தார். இந்த நடைமுறையை அடுத்து மேற்படி சட்டமூலம் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

தமிழ் மக்கள் மீது இனஅழிப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தும் தீர்மானங்கள் இதற்கு முன்னர் இலங்கையின் வடமாகாண சபையிலும், தமிழ்நாடு சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா அவர்களாலும் நிறைவேற்றப்பட்டுள்ளபோதிலும், தென்னாசியாவுக்கு வெளியே இவ்வாறு ஒரு நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ள முதலாவது தீர்மானம் இதுவாகும்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதானால், தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெற்றுள்ளது என்பதை அங்கீகரித்து அதனை சட்டமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது இதுவே உலகின் முதலாவது வரலாற்று நிகழ்வாகும். இது ஒன்ராறியோவில் வாழும் 350,000 இற்கும் அதிகமான தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரலாற்று வெற்றியாகும்.

மேற்படி 104 எனும் சட்ட மூலமானது, இலங்கையில் தமிழ் மக்கள் மீது இனஅழிப்பு நடவடிக்கை கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதை அங்கீகரிப்பதுடன், அதில் கொல்லப்பட்ட உயிர்களுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை யில், பாதிப்புக்குள்ளாகி வாழும் மக்களுக்கு நம்பிக் கையையும் ஊட்டுகிறது. அத்துடன் துன்புறுத்தப்பட்ட தமிழ் மக்களை ஆற்றும் ஒருவழியாக இருக்கும் எனவும் இது கருதப்படுகின்றது.




“இது கனடாவில் மட்டு மல்ல, உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு மிக முக்கியமான வரலாற்றுப் படிக்கல்லாகும். மேலும், நீங்கள் வழங்கிய பெரும் ஆதரவையிட்டு தமிழ் சமூகத்திற்கு மீண்டும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்ராறியோவில் தமிழின அழிப்பு தொடர்பான கல்வி கற்பிப்பதற்கு ஏதுவான சட்டமொன்றை நாங்கள் இணைந்து நிறைவேற்றியுள்ளோம்” என மேற்படி சட்டமூலம் 104ஐ கொண்டுவந்தவரும், ஸ்காபரோ-றூஜ்பார்க் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

“தமிழின அழிப்பை தங்கள் சொந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பதிலும், ஊடகங்களில் எடுத்துரைத்து அனைவரையும் ஏற்று அதனை அங்கீகரிக்கச் செய்வதிலும், சட்டமூலம் 104 இன் தேவையை விளக்குவதிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்” என தமிழ் இளையோர் அமைப்பின் பொறுப்பாளர் சகான் சோமஸ் கந்தராஜா தெரிவித்தார். இதன்போது கடிதங்கள் எழுதுவது முதற்கொண்டு, தத்தமது பகுதி சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து தமிழின அழிப்பு தொடர்பாகவும், அது எப்படித் தம்மைப் பாதித் துள்ளது என்றத கவல்களையும் ஒவ்வொரு இளைய வர்களும் எவ்வாறு எடுத்துரைத்து இதற்கு வலுச்சேர்த் திருந்தனர் என்பது தொடர்பாகவும் அவர் இத்தருணத்தில் பகிர்ந்து கொண்டார்.

இதே போல், கனடிய தமிழ் இளையோர் ஒன்றியம் பொறுப்பாளர் கஜானி பாஸ்கரநாதன் கூறுகையில், “தமிழின அழிப்புக் குறித்து ஒன்ராறியோ வாழ்மக்க ளுக்கு எடுத்து விளக்குவது முன்பை இப்போது மிகவும் முக்கியமாக உள்ளது. கல்வி மூலந்தான் தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையை அடையாளங் கண்டு தடுத்து நிறுத்த முடியும். அது மட்டுமன்றி, மனித குலத்துக்கு எதிராக ஏனைய இடங்க ளிலும் இத்தகைய குற்றங்கள் மீண்டும் நிகழாத வண்ணம் இது போன்ற நடவடிக்கைகளால் விழிப்புணர் வினை ஏற்படுத்த முடியும்” எனவும் அவர் தெரிவித்தார்.

கனடாவின் பன்முகத் தன்மைக்கு முதன்மை எடுத்துக்காட்டாக விளங்கும் ஒன்ராறியோ மாநிலத்தில் பொருளாதாரத்துக்கும், கடின உழைப்புக்கும், அதன் கலாசாரத்துக்கும் கூடிய பங்காற்றும் சமூகங்களில் ஒன்றாக தமிழ் சமூகம் விளங்குகிறது. இங்கு வசிக்கும் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இலங்கை யில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பிலிருந்து தப்புவதற்காக ஒன்றாறியோ மாநிலத் துக் குடிபெயர்ந்தவர்கள் ஆவர். இனஅழிப்பு நடைவடிக்கையினால் இவர்களின் குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. சொல்லொணாத் துயரங்களைக் கடந்து இன அழிப்பிலிருந்து தப்பி உயிர்வாழ்வதற்காக பெருமளவிலான தமிழர்கள் ஒன்ராறியோ மாநிலத்துக்கு வந்தடைந்தனர். குடும்பங்களிலிருந்து பிரிவதும், தமது உறவினர்களை இழப்பதும் ஒரு சமூகத்தில் பாரியஉளவியல் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

எனவேதான், தமிழ் மக்களுக்கு நடத்தப்பட்ட அநீதியை உற்று நோக்கி, தமிழ் மக்கள் அனுபவித்துவரும் உளவியல் தாக்கங்களையும் கூர்ந்து அணுகி, தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது ஓர் இனஅழிப்பு என்றவகையில் சட்டமூலம் 104ஐ ஒன்ராறியோ மாநிலம் கொண்டுவந்துள்ளது. பாதிக்கப்பட்ட ஒருசமூகம், அது எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்களிலிருந்து மீண்டு வரவும், தனது இயல்பு வாழ்வைமீள ஆரம்பிப்பதற்கும் நடைபெற்ற இனஅழிப்பினை அங்கீகரிப்பது முக்கியமானதொன்றாகும்.

“கடந்த 2014 ஆம் ஆண்டில், ஜனவரி மாதத்தை ‘தமிழ் மரபுத் திங்கள்’ ஆக அறிவிக்கும் சட்ட மூலத்தினை கன்சர்வேட்டிவ் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினரான ரொட் ஸ்மித் அவர்கள் அறிமுகப்படுத்தியிருந்தார். அப்போது சட்டமன்ற உறுப்பினர் ரொட்ஸ்மித் அவர்கள் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியில் இருந்தார். மேற்படி சட்ட மூலமான’ தமிழ் மரபுத் திங்கள்’ சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கு ஐந்து முறை சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவேண்டியிருந்தது. அந்தவகையில்,ஸ்காபரோ-றூஜ்பார்க் சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்களால் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் 104ஐ முதல் அறிமுகத்திலேயே அங்கீகரித்து சட்டமூலமாக்கிய முதல்வர் ஃபோர்ட் அவர்களுக்கும் மற்றும் அவரது அரசாங்கத்திற்கும் அவர்களது தலைமைத்துவத்துக்காக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் இந்தச்சட்ட மூலம் 104ஐ கொண்டு வந்திருந்த சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அவர்க ளுக்கும் எமது நன்றிகள்” என கனடிய தமிழர் தேசிய அவையின் பேச்சாளர் றுக்ஸா சிவநாதன் அவர்கள் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்தச் சட்டமூலத்தை நிறை வேற்றுவதில் பெரும்பங் காற்றிய தமிழ் சமூகமும், குறிப்பாக தமிழ் இளையோர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் எனவும், தமிழ் இளையோர் களின் உறுதியான ஆதரவு இன்றி இது சாத்திய மில்லை” எனவும் கூறினார்.

தமிழின அழிப்பினை அங்கீகரித்து, தமது இனத் தின் மீது மேற்கொள் ளப்பட்ட இன அழிப்பால் தமிழர்கள் அனுபவித்து வரும் உளவியல் பாதிப்புகளையும் ஏற்றுக்கொண் டதன் மூலம் ஒன்ராறியோ மாநிலத்தின் முதல்வர் டக்ஃபோர்ட் அவர்கள்தான் ஒரு சிறந்த தலைவர் என்பதை நிரூபித்துள்ளார். அதேவேளையில், ஒன்ராறியோ கன்சர்வேட்டிவ் அரசாங்கமானது, அநீதிகளை எதிர்த்துப் போரிடுவதிலும், கனடாவைத் தாயகமாக ஏற்றுக்கொண்ட தமிழ் மக்களின் பக்கம் துணை நிற்பதிலும் என்றும் உறுதியுடன் செயற்படும் என்பதை மீண்டுமொருமுறை நிறுவியுள்ளது.

இதேவேளையில், குயின்ஸ் பார்க்கிலுள்ள ஒன்ரா றியோ சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ்மக்க ளுக்கு நடைபெற்ற அநீதியினை அறிந்து சட்டமூலம் 104 இற்கான தமது வலுவான ஆதரவை வழங்கியுள்ளனர்.

இதுதொடர்பான விவாதத்தின்போது, தமது தொகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் கடின உழைப்பு, ஒன்ராறியோ சமூகத்துக்கான அவர்களின் பங்களிப்பு தொடர்பாக பல சட்டமன்ற உறுப்பினர்களும் விபரித்திருந்தனர்.


18. நேற்றைக்கு முதல் நாள் புதன்கிழமை பாத்திமா தனது நண்பியைச் சந்தித்த போது " நாளை மறுதினத்திற்கு அடுத்த நாள் எனது பிறந்த தினம் அதற்குக் கட்டாயம் வரவேண்டும் என்று கூறினாள். அவ்வாறாயின் பாத்திமாவின் பிறந்ததினம் வரும் நாள் யாது?

*1. வெள்ளி* *2. ஞாயிறு* *3. சனி*

19. பின்வரும் கணிதச் செய்கையை அவதானித்து வெற்றுக் கட்டத்தில் வரவேண்டிய இலக்கத்தைத் தெரிவு செய்க.

2458 ——— 1
7875 ——— 9
9436 ——— 4
5685 ——— .......

*1. 6* *2. 5* *3. 8*

* 

உருவில் உள்ள பெரிய சதுரமுகி வடிவ மரக்குற்றியை சுற்றி வெளிப்புறம் முழுவதும் நிற மை பூசப்பட்ட பின்னர் அதனை முறித்த கோடு வழியாக பல சிறிய சதுரமுகி வடிவ மரக்குற்றிகளாக வெட்டி எடுக்கப்பட்டன. அதனைக் கொண்டு 21, 21 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

20. மூன்று பக்கமும் நிறமை பூசப்பட்ட சிறிய சதுரமுகி வடிவ மரக்குற்றிகள் எத்தனை கிடைக்கும்?

*1. 10* *2. 8* *3. 12*

21. ஒரு பக்கமும் நிற மை பூசப்படாத சிறிய சதுரமுகி வடிவக் குற்றிகள் எத்தனை கிடைக்கும்?


*1. 6* *2. 4* *3. 8*

22. வெறுமையாக உள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| ⊙ | ✻ | ⊙ | △ | *17* |
| ✻ | ✻ | ✻ | ✻ | *24* |
| | △ | ⬠ | ⬠ | *18* |
| △ | ✻ | ⬠ | △ | *17* |
| *18* | *21* | *20* | *17* | |


*1.* ⬠ *2.* ⊙ *3.* ✻

23. அடைப்பிற்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கக்கூடிய உருவைத் தெரிவு செய்க.




*1.* FOUA *2.* FOOT *3.* ATF

24. உருவில் காட்டப்பட்டுள்ள சதுரத்தாளை உரு A இல் உள்ளவாறு அம்புக்குறி வழியே மடித்து மீண்டும் உரு B இல் உள்ளவாறு மடித்த பின் உரு C யில் உள்ளவாறு துளையிட்டு பின்னர் அவ்வாறே விரிக்கும் போது தோன்றும் உரு பின்வருவனவற்றுள் எது எனத் தெரிவு செய்க.




25. கீழே தரப்பட்டுள்ள வடிவத்தை ஒரு பெரிய சதுரமுகியாக உருவாக்குவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?



*1. 21* *2. 16* *3. 24*

26. வருகை தந்த ஒழுங்கு அடிப்படையில் ஒருவர் பின் ஒருவராக வரிசையில் நின்றோம். நான் அவ்வரிசையில் நடுவில் நிற்கின்றேன். எனக்கு முன்னால் உள்ளவர்களின் நடுவில் ஐந்தாவதாக அன்வர் நிற்கின்றார். எனின் இவ்வரிசையில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாதாக இருக்கும்?

*1. 18* *2. 19* *3. 10*

27. ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்ட விதம் கீழே தரப்பட்டுள்ளது.

A - வள்ளலாய் வளர்வாய் ! B - புன்னகை புரிவாய் !
C - மரங்களிடம் கற்றுகொள் D - பூக்களிடம் கற்றுக்கொள்

கருத்துள்ள கவிதை கிடைக்குமாறு பொருத்தமாக்கும் போது அவ்வரிகளின் சரியான ஒழுங்குமுறை

**1.** DBCA **2.** CBDA **3.** CDAB

28. பின்வரும் நேரமானது ஒரு சுவர்க்கடிகார முட்கள் காட்டும் நேரமாகும்.
**நேரம் 12.05**
இந் நேரத்தை அதே கடிகாரத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியூடாக அவதானித்தால் அக் கண்ணாடியில் தோன்றும் நேரம் பின்வருவனவற்றில் எதுவெனத் தெரிவு செய்க.

**1. நேரம் 12.55** **2. நேரம் 1.55** **3. நேரம் 1.05**

29. துடுப்பாட்ட சுற்றுப் போட்டியொன்றில் 7 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன. அவர்கள் தங்களுக்கிடையில் மாறி மாறி விளையாடிக் கொண்டனர் எனின் எத்தனை போட்டிகள் நடைபெற்றிருக்கும்

**1. 49** **2. 28** **3. 21**

30. முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே வர வேண்டிய மிகப் பொருத்தமான சோடிச் சொற்களைத் தெரிவு செய்க.

தாழ்வான பிரதேசங்களை அண்டி வீடுகளை ........................................... மழை காலங்களில் ............. ................................ மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

**1.** அமைப்பதால், வெள்ளப்பெருக்கால் **2.** கட்டுவதால், மண் சரிவால்
**3.** அமைப்பதால், நோய்களால்

* நிமலன் துடுப்பாட்டத்தில் ஓரளவு விருப்பமும் உதைபந்தாட்டத்தில் மிகவும் விருப்பமும் எல்லேயில் விருப்பமற்றவனும் ஆவான். நிசாம் உதைபந்தாட்டத்தில் ஓரளவு விருப்பமும் எல்லேயில் மிகவும் விருப்பமும் துடுப்பாட்டத்தில் விருப்பமற்றவனும் ஆவான். விமலன் உதைபந்தாட்டத்தில் மிகவும் விருப்பமும் எல்லேயில் ஓரளவு விருப்பமும் துடுப்பாட்டத்தில் விருப்பமற்றவனும் ஆவான். கமலன் துடுப்பாட்டத்தில் ஓரளவு விருப்பமும் உதைபந்தாட்டத்தில் தில் மிகவும் விருப்பமும் எல்லேயில் விருப்பமற்றவனுமாவான்.

மேலுள்ள தகவலின் அடிப்படையாகக் கொண்டு 31, 32 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

31. மூவருக்கு மிகவும் விருப்பமுடைய விளையாட்டு எது?

**1.** எல்லே **2.** துடுப்பாட்டம் **3.** உதைபந்தாட்டம்

32. ஒருவருக்கும் மிகவும் விருப்பம் அல்லாத விளையாட்டு எது?

**1.** துடுப்பாட்டம் **2.** எல்லே **3.** உதைபந்தாட்டம்

# கொரோனாவின் பிடியிலிருந்து இலங்கை மீண்டெழ உதவுங்கள்

## - கனடியத் தூதுவரிடம் சஜித் வேண்டுகோள்

கொழும்பு, மே.08

**எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான கனடியத் தூதுவர் டேவிட் மெக்கின்னனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.**



இதன்போது கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வருவதற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தருமாறு கனடியத் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது முக்கியத்துவம் வாய்ந்த இரு தரப்புப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன. குறிப்பாக உலகம் முழுவதும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள கொரோனாத் தொற்று காரணமாக ஒரு நாடாக இலங்கை எதிர்கொண்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

# 6 நாட்களில் 11,107 பேருக்கு கொரோனா; 67 பேர் மரணம்

கொழும்பு, மே. 08

நாட்டில் கடந்த மே முதலாம் திகதி முதல் நேற்று 6ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 11 ஆயிரத்து 107 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. அத்துடன், 6 நாட்களுக்குள் கொரோனாவால் 67 பேர் உயிரிழந்தனர்.

மே முதலாம் திகதி ஆயிரத்து 699 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலையில், அன்றைய தினம் 9 மரணங்கள் பதிவாகின.

மே 2ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 843 பேருக்கு வைரஸ் பரவியமை கண்டறியப்பட்டது. அன்றைய தினம் 9 மரணங்கள் பதிவாகின.

அத்துடன், மே 3ஆம் திகதி ஆயிரத்து 913 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அன்றைய தினம் 13 மரணங்கள் பதிவாகின.

மே 4ஆம் திகதி ஆயிரத்து 860 பேருக்கும், மே 5 ஆம் திகதி ஆயிரத்து 897 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது. மே 4ஆம் திகதி 11 மரணங்களும், மே 5ஆம் திகதி 14 மரணங்களும் பதிவாகின என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தி அறிக்கை வெளியிட்டிருந்தது.

மே 6ஆம் திகதி ஆயிரத்து 895 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அன்றைய தினம் 11 மரணங்கள் பதிவாகின.



# முல்லைத்தீவில் மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே. 08

முல்லைத்தீவு கடற்கரையை அண்மித்த பகுதிகளில் தொடர்கின்ற மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிலாவத்தை மேற்கு, உப்புமாவெளி ஆகிய இடங்களில் கடந்த பல ஆண்டுகளாக தொடர்கின்ற மணல் அகழ்வால் கடல் நீர் உட்புகும் அபாயம் எழுந்துள்ளது. இயற்கையான மண் மேடுகள் அழிக்கப்பட்டு தென்னைகள் நடுகை செய்வதற்கென காரணங்கள் கூறப்பட்டு பெருமளவு மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

இது தொடர்பாக கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்திலும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டு மணல் அகழ்வை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் மணல் அகழ்வு தடுத்து நிறுத்தப்படவில்லை.

இதன் காரணமாக கடல் கொந்தளிப்புகளின்போது முல்லைத்தீவு - திருகோணமலை வீதிக்கு கடல் நீர் பரவக் கூடிய அபாயம் தற்போது காணப்படுகின்றது.

மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இரசாயன உரங்களை தடை செய்வதால் பஞ்சத்தை நோக்கி பயணிக்கும் இலங்கை

## அடித்து கூறுகின்றது சஜித் அணி

கொழும்பு, மே. 08

இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லிகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்வதற்கான அரசின் முடிவால் நாடு பஞ்சத்தை நோக்கிப் பயணிக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொது செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையின் நெல் உற்பத்தி 40 சதவீதத்தாலும் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாய் 50 சதவீதத்தாலும், தேங்காய் ஏற்றுமதி வருவாய் 20 சதவீதத்தாலும் குறைவடைவதுடன், இலவங்கப்பட்டை ஏற்றுமதி வருவாயிலும் வீழ்ச்சி ஏற்படும்.

அரசின் இந்த முடிவுகளின் விளைவாக நாட்டில் பஞ்சம் ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அத்தியாவசிய உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்ய நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்த சகாப்தத்துக்கு நாடு செல்ல வழிவகுக்கும்.

காட்மியம் போன்ற சில இரசாயனங்கள் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்துவது உண்மைதான். இருப்பினும் செறிவு குறைந்த காட்மியம் அடங்கிய உரங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேதன உரங்கள் பயன்பாட்டுக்கு மாறுவதற்கான நீண்ட கால திட்டம் தேவை" - என்றார்.



# கொரோனா தொற்று நீங்கி சுபீட்சமான வாழ்வு மலர சகல வணக்கஸ்தலங்களிலும் இன்று விசேட வழிபாடு

## - மக்களிடம் சர்வமதத் தலைவர்கள் வேண்டுகோள் -

கொழும்பு, மே. 08

"உலகை உலுக்கி வரும் கொரோனா வைரஸ் தொற்று நீங்கி சுபீட்சமானதொரு வாழ்வு மலர சர்வமதப் பிரார்த்தனையை அனைத்து வணக்கஸ்தலங்களிலும் ஒரே நேரத்தில் இன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன."

- இவ்வாறு பிரதமரின் இந்து விவகாரங்களுக்கான கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இன்று மாலை 5.46 மணியளவில் ஜனாதிபதி, பிரதமரின் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கையிலுள்ள சகல மதத் தலங்களிலும் வழிபாட்டு பிரார்த்தனைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் இந்து ஆலயங்கள் அனைத்திலும் இன்று மாலை 5.46 மணியளவில் மிருத்யுஞ்சய ஹோமம் நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா அச்சுறுத்தலால் பூஜை வேளையில் மக்கள் வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனை செய்து, தீபம் ஏற்றி வழிபடுவது சிறந்தது.

கொரோனா இலங்கையை விட்டு நீங்க வேண்டும். முழு உலகத்தை விட்டும் நீங்க வேண்டும். கொரோனாவால் பாதிப்படைந்தவர்கள் சுகமடைய வேண்டும். எல்லோரும் வளமான வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று இறைவனை மனதார நாம் அனைவரும் ஒருமித்துப் பிரார்த்திப்போம்" - என்றார்.

# நுவரெலியாவில் மேலும் 43 பேருக்குக் கொரோனா

நுவரெலியா, மே. 08

நுவரெலியா மாவட்டத்தில் மேலும் 43 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கினிகத்தேன சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், கந்தபளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால்வருக்கும், கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி நால்வருக்கும், லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், நோர்வூட் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கும், நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், பூண்டுலோயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேருக்கும் வைரஸ் பரவியுள்ளது.



## போதைவஸ்து பாவனையாளர்கள் வாண வெடிகளால் விரட்டியடிப்பு!

பாரிஸ், மே 08

நள்ளிரவில் வீதிகளில் கூடி போதைப் பொருள் மற்றும் மது அருந்தி அட்டகாசங்களில் ஈடுபடுவோர் மீது குடியிருப் பாளர்கள் வாண வெடிகளைச் செலுத்தி விரட்டி அடித்துள்ள னர். தொடர்ந்து இரவில்கூடி தொல்லை தருவோரைக் கட் டுப்படுத்த பொலிஸார் தவறிய தால் விரக்தியடைந்த சில குடி யிருப்பாளர்களே இவ்வாறு சட்டத்தை தம் கையில் எடுத்து இந்தச் செயலைப் புரிந்துள்ள னர் என்று தெரிவிக்கப்படுகி றது.

பிரான்ஸின் தலைநகர் பாரி ஸில் தமிழர்கள் அதிகமாக வசிக் கின்ற லா-சப்பல் அருகே ஸ்ராலின்கிராட் பகுதியில் இந் தச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

அங்குள்ள சில தெருக்களில் நீண்ட காலமாக இரவு நேரத் தில் போதைப்பொருள் விற் பனை மற்றும் பாவனையில் ஈடு படுவோரின் அட்டகாசங்கள் அதிகரித்திருந்தன. இது குறித்து அங்கு வசிப்போர் பொலிஸா ருக்கு பலமுறை முறையிட்டனர். பொலிஸார் அவ்வப்போது நடவடிக்கைகளை எடுத்து வந்த போதிலும் போதைக் கும்பல் கள் இரவில் போடும் ரகளைகள் குறையவில்லை. நீண்டகால மாக போதைப் பொருள்களை விற்போர் அந்தப் பகுதியைத் தங்கள் வாடிக்கைப் பிரதேச மாகப் பயன்படுத்தி வந்தனர்.

இரவில் அவர்களின் சத்தங் களையும் அடிபிடிகளையும் பொறுக்க முடியாத அப்பகுதி குடியிருப்பாளர்கள் சிலர் வெடி கள் மற்றும் வாண வெடிக்களை ஏவுவதற்குப் பயன்படுத்துகின்ற மோட்டார்களை தயார் செய்து எதிர்பாராத சமயத்தில் தாக்கு தல் நடத்தி போதைக் கும்பல் களை விரட்டியடித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இரவு நேரம் வாண வெடி யோசைகளால் அந்தப் பகுதி யில் பெரும் பதற்றம் ஏற்பட் டது. அந்தக் காட்சிகளை படம்பிடித்த சிலர் அவற்றை சமூகவலைத் தளங்களில் வெளி யிட்டனர். அதேசமயம் ஆபத் தான வெடிபொருள்களால் நடத்தப்பட்ட கண்மூடித்தன மான அத்தாக்குதலைப் பிரதேச வாசிகள் சிலர் கண்டித்துமுள்ள னர். (ஐ)

## கூட்டு எதிர்ப்பு சக்தியை எட்டிய குட்டித் தீவில் மீண்டும் தொற்று!

### முடக்கப்படுகிறது சீஷெல்ஸ் தீவு இலங்கைக்கும் முன்னெச்சரிக்கை

சீஷெல்ஸ், மே 08

இந்து சமுத்திரத்தில் தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய சீஷெல்ஸ் என்ற குட்டி நாட்டில் மீண்டும் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் கண்டறியப் பட்டனர். இதையடுத்து அந் நாட்டின் அரசு புதிதாகக் கட் டுப்பாடுகளை அறிவித்துள் ளது. பாடசாலைகள், உணவ கங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன மூன்று வார காலத்துக்கு மூடப்பட்டுள்ளன.

அறுபதுக்கும் அதிக வீதம் பேருக்கு இரண்டு தடுப்பூசி களையும் ஏற்றிய முதல் நாடு மக்களிடையே கூட்டு நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியிருப்ப தாக உலக சுகாதார அமைப் பால் கணிக்கப்பட்ட முதல் நாடு என்ற பெருமையைப் பெற்றிருந்த சீஷெல்ஸின் மொத்த சனத் தொகை சுமார் ஒரு லட்சம் ஆகும்.

தொற்று நோயில் இருந்து விடுபட்டுவிட்டதாக அறிவிக் கப்பட்டிருந்த அங்கு கடந்த சில நாட்களில் மூன்றாவது அலையாக 500 புதிய தொற்றா ளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளனர். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டு தடுப்பூசி களையும் ஏற்றியவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

சீஷெல்ஸ் போன்ற சிறிய மக்கள் தொகை கொண்ட நாடு கள் இலகுவில் விரைவாகத் தமது மக்களுக்குத் தடுப் பூசியை ஏற்றிக்கொள்ள முடிவ தால் அவை தொற்று நோயில் இருந்து முதலில் விடுபடுகின்ற



நாடுகளின் பட்டியலில் இடம் பிடித்து விடுகின்றன. ஆனால், சீஷெல்ஸ் நிலைவரம் அதனைக் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கி றது. பொதுவாக தொற்று நோய்களைக் கூட்டாக எதிர்க் கின்ற காப்பு சக்தி என்பது சனத் தொகையில் 60,70 வீதமா னோர் தடுப்பூசி ஏற்றிக் கொள் கின்ற போது உருவாகி விடும் என்பது உலக சுகாதார நிறுவ னத்தின் கணிப்பு.

சீனா அன்பளிப்பாக வழங் கிய தடுப்பூசி சீஷெல்ஸ் நாட் டில் 66வீதம் பேருக்கு ஏற்றப் பட்டுள்ளது. அஸ்ராஸெனகா மற்றும் சீனாவின் 'சினொ பார்ம்' ஆகிய தடுப்பூசிகளே அங்கு பயன்படுத்தப்பட்டுள் ளன. ஆனால், இவ்விரு தடுப் பூசிகளும் தென்னாபிரிக்காவில் தோன்றிய வைரஸ் திரிபை எதிர்க்கும் திறன் குறைந்தவை என்று சில ஆய்வுகள் வெளி யாகி இருந்தன. சீஷெல்ஸ் நாட்டில் தென்னாபிரிக்கத் திரிபு வைரஸே பரவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை போன்ற இந்து சமுத்திரத்தில் உள்ள சிறிய நாடு கள் பலவற்றில் சீனா மற்றும் இங்கிலாந்து தயாரிப்பு ஊசி களே பயன்பாட்டில் உள்ளன. எனவே, அங்கெல்லாம் கூட்டு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கணிப்பீடு செய்வதில் சில ஐயங் களை சீஷெல்ஸ் நிலைவரம் உருவாக்கி இருக்கிறது. தனது தடுப்பூசி வைரஸ் எதிர்ப்புத் திறன் குறைந்தது என்பதை ஏற்றுக்கொண்டுள்ள சீனா, மூன்றாவது ஊசியைச் சிபாரிசு செய்வதற்கு ஆலோசித்து வருகிறது. (ஐ)

## கொலம்பியாவில் தொடர் போராட்டம்! 25 பேர் பலி: 379 பேரை காணவில்லை!

பொகோதா, மே 08

கொலம்பியாவில் அரசாங் கத்திற்கு எதிராக முன்னெடுக் கப்படும் போராட்டங்களில் 25 பேர் உயிரிழந்தனர். 379 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள னர். நூற்றுக்கும் மேற்பட்ட வர்கள் காயமடைந்துள்ளனர் என்று அங்குள்ள ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் அண்மையில் வரிச் சீர்திருத்தம் ஒன்றை அர சாங்கம் அறிமுகப்படுத்தியது. இதனால் எரிவாயு விலைகள் மற்றும் பயன்பாட்டு கட்ட ணங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்பு உருவானது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி முதல் வெகுஜன போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மக்களின் இந்த போராட் டங்களை அரசாங்கம் அடக்க முயன்றதில், 25 பேர் உயிரிழந்த னர். நூற்றுக்கணக்கானோர்



காயமடைந்துள்ளனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியுள்ளன.

போராட்டங்களின் விளை வாக 352 பொதுமக்கள் மற்றும் 38 சட்ட நடைமுறை அதிகாரி கள் காயமடைந்துள்ளனர். கொலம்பியாவின் ஒம்புட்ஸ் மன் அலுவலகத்தின் சமீபத்திய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அதேநேரம் இந்த சம்பவம் அமெரிக்க அரசாங்கத்திடமி ருந்தும் ஐரோப்பிய ஒன்றியத் திலிருந்தும் கவலைக்குரிய அறிக்கைகள் வெளியாகியுள் ளன. 51 பேர் தொடர்பில் தேடல்கள் தொடர்கின்றன. 38 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள னர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியாவின் நெருக்கடி நிலை முழு உலகுக்குமான எச்சரிக்கை!

### யுனிசெவ் அமைப்பு

ஜெனிவா, மே 08

இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நோய் நெருக்கடி நிலைமை முழு உல கத்துக்குமான எச்சரிக்கை என ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவித்துள்ளது.

கொரோனா இரண்டாவது அலையால், இந்தியா கடுமை யாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சோகமான நிலை நம் அனை வருக்கும் அடிக்கப்பட்டுள்ள எச்சரிக்கை என யுனிசெவ் நிறை வேற்றுப் பணிப்பாளர் ஹென்றி யாட்டா போர் தெரிவித்துள் ளார்.

இந்நேரத்தில் இந்தியாவுக்கு நாம் உதவி செய்யவில்லை என் றால், உலகில், வைரஸால் பலி யானோரின் எண்ணிக்கை மிக வும் அதிகரிக்கும். யுனிசெவ் சார்பில், இந்தியாவுக்கு வைரஸ் தொற்றிலிருந்து மக்களை காப் பாற்றும் பல சாதனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தெற்காசியாவின் பல நாடுகளி லும், வைரஸ் தொற்று அதி கரித்து வருவது கவலையளிக் கிறது. இதை தடுப்பதற்கு, உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். (ஐ)

## இரண்டாயிரம் வெளிநாட்டவர்கள் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றனர்

பாரிஸ், மே 08

பிரான்ஸில் கொரோனா சுகாதார நெருக்கடிக்குள் தங்கள் பணிகளை தொடர்ந்து செய்துவந்த வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இரண்டாயிரம் பேருக் கு விரைவான பரிசீலனையின் அடிப் படையில் பிரெஞ்சுக் குடியுரிமை வழங் கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் பிறந்த 665 இளவய தினர் உட்பட இரண்டாயிரத்து ஒன்பது (2009)பேருக்கு "நாட்டுடன் கொண்டி ருந்த நெருக்கமான ஈடுபாட்டின்" அடிப் படையில் குடியுரிமை வழங்கப்பட்டுள்ள தாக அதற்குப் பொறுப்பான அமைச்சர் மார்லின் ஷியப்பா தெரிவித்திருக்கிறார்.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் அத்தியாவசியத் தொழில்களில் ஈடுபட்ட வர்களின் குடியுரிமை விண்ணப்பங்களை முன்னுரிமை அடிப்படையில் விரைவா கப் பரிசீலித்து "செயல்திறன்மிக்க பங்க ளிப்பை" வழங்கியோருக்கு குடியுரிமை வழங்குமாறு பிரான்ஸ் அரசு கடந்த ஆண்டு உத்தரவிட்டிருந்ததமை குறிப்பி டத்தக்கது.




# மட்டரிட் ஓப்பன் ரென்னிஸ் இறுதியாட்டத்தில் ஆஷ்லே!

மட்ரிட், மே 08

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸின் இறுதியாட்டத்துக்கு அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி முன்னேறியுள்ளார்.

ஸ்பெயினின் தலைநகர் மட்ரிட்டில் நடக்கும் பகிரங்க ரென்னிஸ் போட்டியில் பெண்களுக்கான பிரிவு ஆட்டங்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில், உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி தனது அரையிறுதியில், உலகின் 62ஆம் நிலை வீராங்கனையான ஸ்பெயினை சேர்ந்த பௌலா படோசாவை 6-4, 6-3 என்ற நேர் செற்களில் இலகுவாக வீழ்த்தினார்.

இறுதியாட்டத்தில், பார்டி பெலாரஸின் அரைனா சபலென்கா அல்லது ரஷ்யாவின் அனஸ்தாசியா பாவ்லியுசென்கோவா ஆகியோரில் ஒருவரை எதிர்கொள்ளவுள்ளார். (ஐ)

## இங்கிலாந்து டெஸ்ட் : இந்திய அணி விவரம்

புதுடில்லி, மே 08

இங்கிலாந்தில் வரும் ஜூன் மாதம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்காக செல்லும் இந்திய அணி, அதன்பின் 5 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணியுடன் மோதுகிறது. இந்தத் தொடருக்கான உத்தேச வீரர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது.

அணி விவரம் :

ரோஹித் சர்மா, ஷப்மன் கில், பிரித்வி ஷா, மயங்க் அகர்வால், அபிமன்யு ஈஸ்வரன், பிரயங்க் பஞ்ச்சல், தேவ்தத் படிக்கல் சத்தேஸ்வர் புஜாரா, விராட் கோலி, அஜின்கியே ரஹானே, ஹனுமா விஹாரி, கே.எல்.ராகுல். வாஷிங்டன் சுந்தர், ஹார்திக் பாண்ட்யா, ரவிச்சந்திர அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்ஸர் பட்டேல், ராகுல் சஹர்.

ஜஸ்பிரித் பும்ரா, இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், முகமது ஷமி, ஷர்துல் தாக்கூர், முகமது சிராஜ், நவ்தீப் ஷைனி, ஆவேஷ் கான், பிரசித் கிருஷ்ணா, புவனேஷ்வர் குமார். (ஐ)

### ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக்

# இறுதியாட்டத்துக்கு செல்சி முன்னேற்றம்!

லண்டன், 08

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட போட்டியின் அரையிறுதியில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்திய செல்சி அணி, 3ஆவது முறையாக இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளது. இதனால் இறுதியாட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி அணியை எதிர்த்து செல்சி மோதுகின்றது.

இரு அரையிறுதி ஆட்டங்கள் கொண்ட போட்டியில், ரியல் மட்ரிட் அணியை செல்சி அணி எதிர்கொண்டது. இதில் முதல் அரையிறுதி ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இதில் 2-0 என்ற கோல் கணக்கில் செல்சி அணி வெற்றி பெற்றது. இதனால், மொத்தமாக 3-1 என்ற கோல் கணக்கில் மட்ரிட்டை வென்று இறுதியாட்டத்துக் தகுதிபெற்றுள்ளது செல்சி.

லண்டனில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் செல்சி அணி தரப்பில் டெமோ வெர்னர், மேசன் மௌன்ட் ஆகியோர் கோலடித்தனர்.



ஆட்டத்தின் 18-ஆவது நிமிடத்திலேயே சக வீரர் சில்வெல் அளித்த கிராஸை செல்சி வீரர் வெர்னர் கோல் கம்பங்களுக்குள் தள்ள, அப்போது அந்தப் பகுதியில் துடுப்பாட்ட வீரர்களெவரும்இல்லாமல்போனதால் அந்த கோல் செல்லுபடியாகாதென நடுவர் அறிவித்தார்.

26-ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் வீரர் கரின் பென்ஸிமா அற்புதமாக ஒரு கோலுக்கு முயற்சிக்க, செல்சி கோல் காப்பாளர் மென்டி அதைத் திறம்படத் தடுத்தார்.

அடுத்த 2 நிமிஷங்களில் செல்சி அணி, ஆட்டத்தின் முதல் கோல் அடித்தது. 28ஆவது நிமிடத்தில் செல்சி வீரர் காய் ஹாவெர்ட்ஸ் கோலடிக்க முயற்சிக்க, அவரைத் தடுக்க முன்னேறி வந்த ரியல் மட்ரிட் கோல் காப்பாளர் கைகளில் பட்டு பந்து மேலெழுந்தது.

அது கோல் கம்பத்தில் பட்டு மீண்டும் களத்துக்கு திரும்ப, ஹாவெர்ட்ஸுடன் வந்து கொண்டிருந்த டெமோ வெர்னர் தலையால் முட்டி பந்தை மீண்டும் கோல் ஆக்கினார்.

இதனால் செல்சி அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து 35-ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் வீரர் பென்ஸிமா மேற்கொண்ட கோல் முயற்சியையும் செல்சி கோல்காப்பாளர். மென்டி முறியடித்தார்.

இவ்வாறாக நிறைவடைந்த முதல் பாதியில் செல்சி 1-0 என முன்னிலையில் இருந்தது. பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் இரு அணிகளும் பரஸ்பரம் முயற்சித்தும் கோல் வாய்ப்புகள் கடினமானது. இந்நிலையில் 85ஆவது நிமிடத்தில் செல்சிக்கு 2-ஆவது கோல் கிடைத்தது. இறுதியில் அந்த அணியே 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது. (ஐ)

# ஒலிம்பிக் போட்டியை நிறுத்தக்கோரி 2 இலட்சம் கையொப்பம் திரட்டல்!

ரோக்கியோ, மே 08

ரோக்கியோ ஒலிம்பிக்கை ரத்து செய்யக் கோரும் ஓர் இணையத்தள விருப்பம் கோரல் மனு கடந்த சில நாட்களில் கிட்டத்தட்ட 2 இலட்சம் கையெழுத்துக்களை பெற்றுள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக ஏற்கனவே, ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட கோடை ஒலிம்பிக்கின் தொடங்க மூன்று மாதங்களுக்கும் குறைவான கால அவகாசமே உள்ளது.

ரோக்கியோ உலகளாவிய நிகழ்வை எவ்வாறு நடத்தலாம் மற்றும் தன்னார்வலர்கள், விளையாட்டு வீரர்கள், அதிகாரிகள் மற்றும் ஜப்பானிய பொதுமக்களை கோவிட்-19 இலிருந்து எவ்வாறு பாது காப்பாக வைத்திருக்க முடியும் என்ற கேள்விகள் இன்னும் உள்ளன.

இந்நிலையில் "ரோக்கியோ ஒலிம்பிக்கை நிறுத்து" (Stop Tokyo Olympics) என்று இணையத்தளத்தில் தொடங்கப்பட்ட இணையத்தள பிரச்சாரம் இரண்டு நாட்களிலேயே 187,000 க்கும் அதிகமான கையொப்பங்களை பெற்று, இரண்டு இலட்சங்களை நெருங்குகிறது.

இந்த முடிவுகள் ஜப்பானின் தலைநகரில் பெரு விளையாட்டு நிகழ்வை நடத்துவதில் பொதுமக்களின் கவலையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தொற்றுநோயின் நான்காவது அலையை எதிர்த்து, மந்தமான தடுப்பூசி பிரசாரத்துடன் போராடி வரும் ஜப்பானிய அரசாங்கம் ரோக்கியோவிலும் மற்ற மூன்று பகுதிகளிலும் அவசரகால நிலைகளை மே இறுதி வரை நீட்டிக்க முயல்கிறது என்று அந்நாட்டு பொருளாதார அமைச்சர் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை ஜூலை 23 ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கொரோனா நிவாரண நிதியாக கோலி ரூ.5 கோடி வழங்கினார்!

புதுடில்லி, மே 08

கோவிட் - 19 நிவாரண நிதியாக இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலியும் அவரின் மனைவியுமான நடிகை அனுஷ்கா சர்மாவும் 2 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 5 கோடி ரூபாயை வழங்கியுள்ளனர்.

அவர்கள் இருவரும் கொரோனா நிவாரணத்திற்காக 7 கோடி இந்திய ரூபாயை திரட்ட இலக்கு வைத்துள்ளனர்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக அவர்கள் 2 கோடி ரூபாயை நன்கொடையாக அளித்துள்ளனர்.

இந்த நிதியின் மூலம், கொரோனாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒட்சிசன், மருத்துவ வசதிகள், தடுப்பூசி விழிப்புணர்வு, தொலைபேசி மருத்துவ உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும். நமது நாட்டின் வரலாற்றில் நாம் இதற்குமுன்னெப்போதும் இல்லாத நாட்களை கடந்து வருகிறோம், அனைவரும் ஒன்று சேர்ந்து இருந்து, பலரின் உயிரைக் காப்பதுதான் தேசத்துக்கு அவசியம் என்று இதன் போது கோலி குறிப்பிட்டார்.

# மட்ரிட் ரென்னிஸ்: காலிறுதியில் நடால்!



மட்ரிட், மே 08

மட்ரிட் ஓப்பன் ஆண்களுக்கான பிரிவில் ஸ்பெயினின் ரபேல் நடால் காலிறுதிக்கு முன்னேறினார்.

முந்தைய சுற்றில் அவர் அவுஸ்திரேலியாவின் அலெக்ஸி பாபிரினை 6-3, 6-3 என்ற நேர் செற்களில் வீழ்த்தினார்.

இதேபோல் போட்டித்தரவரிசையில் 3ஆம் இடத்திலிருக்கும் ஆஸ்திரியாவின் டொமினிக் தீம் 7-6 (9/7), 6-4 என்ற செற்களில் அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாரை வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றார். (ஐ)

# ஓட்டோ சாரதி கடத்தல்: இருவர் சிக்கினார்கள்

கொழும்பு, மே. 08

ஆட்டுப்பட்டித்தெரு - கதிரேசன் வீதியில் ஓட்டோ சாரதி ஒருவரைக் கடத்திய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரேசன் வீதியில் கடந்த 2ஆம் திகதி ஓட்டோ சாரதி ஒருவரைப் பொலிஸார் என்று அடையாளப்படுத்திக் கொண்ட இருவர் கடத்திச் சென்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது சந்தேகநபர்கள் ஓட்டோ சாரதியிடமிருந்து, அவர் அணிந்திருந்த மோதிரத்தைப் பறித்துக்கொண்டுள்ளதுடன், பின்னர் அவரை வாழைத்தோட்டம் - பண்டாரநாயக்க மாவத்தை பகுதியில் ஓட்டோவிலிருந்து இறக்கிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் தனியார் தங்க நகை வைப்பு நிலையமொன்றில் மோதிரத்தை வைப்புச் செய்துள்ளதுடன் ஓட்டோவை பொரளைப் பகுதியில் கைவிட்டுச் சென்றிருந்தனர். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கடந்த புதன்கிழமை பொரளைப் பகுதியில் வைத்து சந்தேகநபர்களின் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

# தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் 30 பேருக்கு கொரோனா தொற்று

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நிபுணர்கள் உள்ளிட்ட 30 ஊழியர்களுக்கு கொவிட் 19 தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. தலவாக்கலை லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ஜனத் அபேகுணவர்த்தன இதனை தெரிவித்தார்.

குறித்த தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் பணி புரியும் 40 ஊழி யர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் இனம் காணப்பட்டனரென அவர் மேலும் கூறினார்.

# நாட்டை முடக்காவிட்டால் இந்தியாவின் நிலைமை

## சுகாதார பரிசோதகர் சங்கம் சிவப்பு எச்சரிக்கை



கொழும்பு, மே. 08

**"இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று 70 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. உடனடியாக நாட்டை முடக்கி நிலைமைகளைக் கட்டுப்படுத்தாவிட்டால் மருந்து மற்றும் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படும்."**

**- இவ்வாறு பொது சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டின் நிலைமை குறித்து சிவப்பு எச்சரிக்கை விடுப்பதாகவும் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் கொரோனா வைரஸ் பரவல் நிலைமை குறித்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நாட்டில் தற்போது கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படும் எண்ணிக்கையானது 70 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் செய்தால் அதிகளவிலான தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுவர்.

தற்போது சிவப்பு எச்சரிக்கை விடும் அளவுக்கு நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

உடனடியாக நாட்டை முடக்க வேண்டும் என்பதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்துவிட்டோம்.

அத்தோடு கொரோனாத் தடுப்பு செயலணிக் கூட்டங்களிலும் நாம் இதனை உரிய காரணிகளுடன் கூறியுள்ளோம். ஆனால், அரசியல் தலையீடுகள் காரணமாக நாட்டின் சுகாதார நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாதுள்ளனர்.

கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பகுதிகள்கூட அரசியல்வாதிகளின் தலையீட்டால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. அதேபோல் பிலியந்தலை பிரதேசத்தில் அரசியல்வாதிகளின் தலையீட்டால் முடக்கப்பட்ட பகுதியொன்று திறக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகளை அறிந்தே சுகாதார அதிகாரிகள் ஒரு பிரதேசத்தை முடக்கினர். ஆனால், அரசியல்வாதிகள் எமது கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியும் நிலைமை உருவாகியுள்ளது.

பொது முடக்கமே எமக்கு இருக்கும் ஒரே வழிமுறையாகும். உடனடியாக நாம் கட்டுப்பாடுகளை விதித்து இரு வார காலமேனும் நாட்டை முடக்காது போனால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாகும். மரணங்களும் அதிகரிக்கும். இது இந்தியாவின் நிலையை அடையலாம்" - என்றார்.

# அரசின் புதிய சட்டமூலங்களுக்கும் ஆதரவளிக்க தயாராகின்றீர்களா?

## பிரதமரின் இப்தார் நிகழ்வில் பங்கேற்ற முஸ்லிம் எம்.பிக்களிடம் இம்ரான் கேள்வி

கொழும்பு, மே. 08



"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வில் 20 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு ஆதரவ ளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் கலந்து கொண்டிருந்தமை சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது. அரசு அடுத்து கொண்டு வரவுள்ள சட்டமூலங்களுக்கு ஆதரவளிப்பதற்கு இவர்கள் தயாராகின்றார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"எதிர்வரும் காலங்களில் இரண்டு முக்கியமான சட்டமூலங்களை அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எண்ணியுள்ளது. ஒன்று துறைமுக நகரை மொத்தமாக சீனாவுக்குத் தாரை வார்க்கும் சட்டமூலம். மற்றையது சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் ஒழிக்கும் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பான சட்டமூலமாகும்.

இந்தச் சட்டமூலங்களுக்கும் இவர்களின் ஆதரவைப் பெறவா இந்த இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது என்ற கேள்வி இன்று எமக்குள் எழுகின்றது. ஆனால், முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்னைகள் தொடர்பாக கலந்துரையாடவே இந்நிகழ்வுக்கு சென்றதாக அதில் கலந்துகொண்ட சிலர் தெரிவித்துள்ளனர். அவர்கள் கூறுவது உண்மையெனில் அது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், இவர்கள் கூறுவதை போன்று எந்தச் சமூகப் பிரச்னைக்குத் தீர்வுகளைப் பெற்றுத்தர முடியும்?

அபகரிக்கப்படும் கிழக்கு மாகாண காணிகளை இவர்களால் மீட்க முடிந்ததா? அல்லது இதைத் தடுக்க முடிந்ததா? ரிஷாத் பதியுதீன், அஸாத் ஸாலி போன்றவர்களின் கைதைத் தடுக்க முடிந்ததா? அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள புர்கா தடையை நீக்க முடிந்ததா? இருபதுக்கு ஆதரவளித்த பின் இவர்களால் எந்தச் சமூக பிரச்னைகளுக்கு இதுவரை தீர்வு காண முடிந்தது என்பதை இவர்களில் ஒருவராவது கூறுவார்களா?

எதிர்காலத்தில் அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் சட்டமூலங்களுக்கு இவர்கள் ஆதரவு வழங்குவார்களேயானால் அது சிறுபான்மை சமூகத்தின் பல சந்ததிகளை பாதித்து எமது இருப்பையும் பிரதிநிதித்துவத்தையும் கேள்விக்குறியாக்கும்" - என்றார்.

# அரசுக்குத் தோல்வி!

## துமிந்த நாகமுவ கூறுகின்றார்

கொழும்பு, மே. 08



"நாட்டில் தற்போது 69 கர்ப்பிணிப்பெண்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருப்பதுடன் ஒருவர் உயிரிழந்தார். மருத்துவர் ஷாபி சிங்களப் பெண்களுக்கு கருத்தடை சிகிச்சை மேற்கொண்டதாகக்கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, ஏன் கர்ப்பவதிப் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை?

- இவ்வாறு தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் செயலாளர் துமிந்த நாகமுவ கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் கூறியதாவது: -

"கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமடைந்திருக்கும் நிலையில், இதன் விளைவாக அரச ஊழியர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். வைரஸ் பரவலின் முதலாவது அலையின்போது அரச ஊழியர்கள் தொடர்பில் அரசு சில வழிகாட்டல்கள் மற்றும் தீர்மானங்களை வெளியிட்டது.

ஆனால், தற்போது அரச ஊழியர்கள் தொடர்பில் அரசால் வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தல் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்திலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வர்த்தமானி அறிவித்தலின்படி அரச நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களை வாரத்துக்கு இருமுறை அலுவலகத்துக்கு அழைக்கமுடியும் என்றும், ஏனைய தினங்களில் விடுமுறை வழங்கமுடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி மாதத்துக்கு 8 நாட்கள் ஊழியர்களை அலுவலகத்துக்கு அழைக்க முடியும். எனினும், அது குறித்து அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதன்விளைவாக பெரும்பாலான நிறுவனங்கள் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை.

மாறாக அனைத்து ஊழியர்களும் தினமும் அலுவலகத்துக்கு அழைக்கப்படுகின்றனர். இதனால் தற்போதைய தொற்றுப் பரவலுக்கு மத்தியில் ஊழியர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" - என்றார்.

# அதிக விலையில் உரம் விற்பனை : கிளிநொச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, மே. 08

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் தனியாரால் அனைத்து வகை உரங்களும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித் துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய உள்ளீடுகள் மற்றும் உரம், கிருமிநாசினி விற்பனை செய்யும் வியாபாரிகள் பலர் உரங்களை பதுக்கிய நிலையில் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி அதிக விலையில் விற்பனை செய்வதாகவும், விற்பனை செய்கின்றபோது அதற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படுவதில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அனைத்து வகையான உரங்களும் இரட்டிப்பு விலையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கும் விவசாயிகள், இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

## நாட்டை ஒருபோதும்...

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ருவண்புர அதிவேக நெடுஞ் சாலை திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் பிரதமர் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய பாதுகாப்பும், பொருளாதாரமும் பூச்சியப்படுத்தப்பட்டு, அபிவிருத்தி நிறுத்தப்பட்டிருந்த ஒரு நாட்டையே நாம் மீண்டும் பொறுப்பேற்றோம். எனினும், அந்தச் சவாலை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டோம்.

நாட்டை அபிவிருத்தி செய்தல், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றல் போன்று இந்நாட்டு மக்களுக்கு எப்போதும் சிறந்ததை வழங்குவதே எமது தேவையாகக் காணப்பட்டது.

அதனால் எத்தகைய தடைகள் நேரிடினும், எத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலேனும் நாம் ஒரு அரசு என்ற ரீதியில் நாம் முன்வைத்த கொள்கைகள் யதார்த்தமாகும் வரை அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைக்கு முன்னுரிமை வழங்கி நமது அரசு செயற்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதேபோன்று எவ்வாறான இக்கட்டான சூழ்நிலையிலும் நாட்டின் அபிவிருத்தியை நாம் கைவிட்டதில்லை. கைவிடப் போவதும் இல்லை.

ஒரு சிறந்த சாலை அமைப்பு என்பது நாட்டின் அபிவிருத்தியை மதிப்பிடும் ஒரு காரணி என்றே நான் நம்புகின்றேன். மஹிந்த சிந்தனையில் போன்றே சுபீட்சத்தின் நோக்கிலும் நாம் அது குறித்து தெளிவாக வெளிப்படுத்தியுள்ளோம்.

தற்போது முழு உலகமும் கொரோனாத் தொற்றுக்கு எதிராகப் போராடி வருகின்றது. கொரோனாத் தொற்று காரணமாக நமக்கு நாட்டை ஒருபோதும் முடக்க முடியாது. வைரஸுக்கு எதிராகப் போராடும் அதேவேளை நாட்டு மக்களின் பொருளாதார நிலை குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்.

மக்கள் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுவார்களாயின் இந்த நிலையைக் கட்டுப்படுத்துவது அவ்வளது கடினமானதாக அமையாது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதனால் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றுமாறு நான் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நாம் ஒரு நாடு என்ற ரீதியில் ஒன்றாகக் கைகோர்த்து இந்தச் சவால் மிகுந்த காலப்பகுதிக்கு முகங்கொடுப்போம். உங்கள் அனைவரும் சிறந்த எதிர்காலம் அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன் - என்றார். (அ-இ)

## நிலைமை...

பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாட்டில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நிலைமைகளை அரசு கையாளும் விதம் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரஷ்யாவில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ள ஸ்புட்னிக் - 5 கொரோனாத் தடுப்பூசிகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் பொதுமக்களுக்கு ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இந்த மாதம் இறுதி வரையில் தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

கட்டம் கட்டமாக எமக்கு ஸ்புட்னிக் -5 தடுப்பூசிகள் கிடைக்கவுள்ள காரணத்தால் எம்மால் நிலைமைகளை இலகுவாகக் கையாள முடியும் என நம்புகின்றோம்.

அமெரிக்காவின் உற்பத்தியான பைசர் தடுப்பூசிகளுக்கும் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய ஐந்து மில்லியன் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கவும் பைசர் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

எனவே, விரைவில் பைசர் தடுப்பூசிகளையும் நாம் பெற்றுக்கொள்வோம்.

இதேவேளை, நிலைமைகளையும் மீறி நாட்டில் வைரஸ் பரவல் காணப்படுமாயின், நிலைமைகள் மோசமடையுமாயின் அடுத்ததாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

தேவைப்படின் நாட்டை முற்றாக முடக்க முடியும். அது குறித்து எதிர்காலத்தில் சிந்திக்க முடியும்- என்றார். (அ-இ)

## 600,000...

ஆறு லட்சமாகும். அந்த தேவையை பூர்த்தி செய்ய உலக சுகாதார தாபனம் உதவுமென தான் நம்புவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உலக சுகாதார தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானோமிடம் தெரிவித்துள்ளார். .

உலக சுகாதார தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானோமுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொவிட் நோய்த் தொற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உலக சுகாதார தாபனத்தின் பாராட்டுக்களைத் தெரிவித்த டெட்ரோஸ், அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதியிடம் கூறினார்.

முதல் கொவிட் அலைக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய தலைமைத்துவத்தை டெட்ரோஸ் அதானோம் பாராட்டினார். இதன்போது உலக சுகாதார தாபனத்தின் தலைமையில் நடைபெற்ற மாநாடுகளில் இலங்கையின் வெற்றி குறித்து கலந்துரையாடப்பட்டதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இம்முறையும் கொவிட் வைரஸ் பரவுவதை விரைவில் கட்டுப்படுத்த இலங்கை அரசுக்கு முடியும் என்று உலக சுகாதார தாபனம் நம்பிக்கை தெரிவித்தது.

இரண்டாவது கட்டமாக தடுப்பூசி ஏற்றுவதற்கு 20 மில்லியன் “அஸ்ட்ராசெனேகா” தடுப்பூசிகளுக்கான தேவை உலகளவில் உள்ளது. நாட்டில் அதன் தேவை 600,000 தடுப்பூசிகளாகும். அந்த தேவையை பூர்த்தி செய்ய உலக சுகாதார தாபனம் உதவுமென தான் நம்புவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

“சீனோபார்ம்“ தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு அடுத்த மூன்று நாட்களுக்குள் உலக சுகாதார தாபனத்தின் அங்கீகாரத்தை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று டெட்ரோஸ் குறிப்பிட்டார். அந்த அனுமதியுடன் நாட்டில் பெரும்பான்மையான மக்களுக்கு “சீனோபார்ம்” தடுப்பூசியை வழங்க முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உலக சுகாதார தாபனம் பிராந்திய மட்டத்திலும் அதன் கொழும்பு அலுவலகத்தின் ஊடாகவும் அளித்து வரும் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

## மேயர் நியமித்த...

டுள்ளனர்.

கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவின் அலுவலகத்துக்கு எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு வாக்குமூலம் அளிப்பதற்குச் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரத்தைத் தூய்மையான நகரமாகப் பேணுவதற்காக மாநகர சபை ஊழியர்கள் ஐவரும் மாநகர காவலர்களாகத் தனியான சீருடை அணிந்து கடந்த மாதம் கடமைக்கு அமர்த்தப்பட்டனர்.

எனினும், உத்தியோகத்தர்கள் அணிந்திருந்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையின் சீருடைக்கு ஒத்தது எனச் சர்ச்சை எழுந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-இ)

## கிளிநொச்சி...

நிறுத்தப்பட்டு, விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களை வீடுகளுக்குச் செல்ல அனுமதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி வளாக பீடாதிபதிகளின் அவசர கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு :

நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பொறியியல் பீடம், விவசாய பீடம், தொழில் நுட்ப பீடம் ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு, விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களை வீடுகளுக்குச் செல்ல அனுமதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களையும், ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாணவர்களையும் அவர்களின் பரீட்சைகள் முடியும் வரை விடுதிகளில் தங்கியிருப்பதற்கு அனுமதிப்பதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பொறியியல் பீடம், விவசாய பீடம், தொழில் நுட்ப பீடங்களைச் சேர்ந்த சுமார் 1500 மாணவர்கள் விடுதிகளில் தங்கி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் அனைவரும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விடுதிகளில் தங்கிக் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் கிரமமாக எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இது வரை இவர்களில் எந்தவொரு தொற்றாளரும் அடையாளப்படுத்தப்படவில்லை. ஆனாலும் வடக்கு மாகாணத்திலும், நாடெங்கிலும் எழுந்துள்ள நிலைமைகளை அடுத்து மாணவர்களை வீடுகளுக்கு அனுப்புவதற்கு பீடாதிபதிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சைகளுக்குத் தோற்றும் தொழில் நுட்ப பீடத்தைச் சேர்ந்த இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் 205 பேரும், பொறியியல் பீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 125 பேரும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 140 பேருமாக 470 மாணவர்கள் மட்டும் அவர்களின் சுய விருப்பின் பேரில் விடுதிகளில் தங்கி அத்தியாவசியமான பரீட்சைத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக விடுதி அறை ஒன்றுக்கு ஒரு மாணவன் என்ற நடைமுறையும் பின்பற்றப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## நேற்றும் 1,914...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 338 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா நோயாளர்களில் ஒரு இலட்சத்து ஆயிரத்து 763 பேர் குணமடைந்துள்ளனர் என்றும், 18 ஆயிரத்து 830 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் இதுவரை 745 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-இ)

## மூன்று மாத...

சிசுவின் தாய் மற்றும் குடும்பத்தினர் அண்மையில் புத்தாண்டு விடுமுறைக் காலத்தில் கொழும்பிலுள்ள உறவினர்களது வீட்டுக்குச் சென்று வந்திருப்பது தெரியவந்துள்ளது. (அ-இ)

## தடுப்பூசி...

புரை விடுத்தார். குறுகிய காலத்தில் முடியுமானளவு தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்க வேண்டுமென நாளாந்தம் ஒன்றுகூடும் கொவிட் குழுவுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

நோய் பரவுவதற்கு அதிகளவு வாய்ப்புள்ள மேல் மாகாணம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். ரஷ்ய நாட்டின் உற்பத்தியான ஸ்புட்னிக் தடுப்பூசியை வழங்கும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது. சீனாவிலிருந்து கிடைக்கப்பெற்ற 6 இலட்சம் “சைனோபாம்” தடுப்பூசிகள் சுகாதார அமைச்சிடம் உள்ளன. 51 நாடுகளில் 55 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு “சைனோபாம்” தடுப்பூசிகள் வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ளன. அந்த நாடுகளின் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடி அந்த தடுப்பூசிகளை விரைவாக பெற்றுக்கொடுப்பதற்கு உள்ள வாய்ப்புகளை கண்டறியுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

முதலாவது தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களுக்கு “அஸ்ட்ரா செனிக்கா” தடுப்பூசியின் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. “அஸ்ட்ரா செனிக்கா” தடுப்பூசிகள் மேலதிகமாக உள்ள நாடுகளில் இருந்து தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கு தேவையான கலந்துரையாடல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## சீனோபார்ம்...

ஜயசுமண இதனை தெரிவித்தார்.

நாட்டில் கொவிட் தொற்றாளர்கள் அதிகம் பதிவாகும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை தேர்ந்தெடுத்து குறித்த மக்களுக்கு தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தால் 6 இலட்சம் சீனோபார்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் அவற்றில் ஒரு பகுதி இங்கு வசிக்கும் சீனர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆகிய இரண்டு ஆய்வுகூடங்களில் 668 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் 18 பேரும் கிளிநொச்சி, மன்னாரில் தலா ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கு கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். சிறைச்சாலையில் 9 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஐவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள். மற்றொருவர் தொற்றாளருடன் முதன்மைத் தொடர்புடையவர்.

அத்துடன், சுன்னாகம் மின் நிலையப் பகுதியில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தொற்றாளர்களுடன் முதல்நிலையத் தொடர்புடைய ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

## தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் கௌரவிக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், மே 08

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடளாவிய ரீதியில் கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற தனராஜ் சுந்தர்பவன் நேற்று சித்தார்த்தன் எம்.பியால் கௌரவிக்கப்பட்டார்.

அவரின் வீட்டுக்கு சென்று அவரைப் பாராட்டிக் கௌரவித்தார் சித்தார்த்தன் எம்.பி. அவருடன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், சாவகச்சேரி நகர சபை முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர் ஆகியோரும் சென்று மாணவனுக்கு பாராட்டுக்களை தெரிவித்தனர். (ஐ)

## அச்சுறுத்தும் மூன்றாம் அலை!

# நாட்டின் சுற்றுலா தளங்கள் அனைத்தும் மூடப்படுகின்றன!

கொழும்பு, மே 08

**இலங்கையில் கொரோனா மூன்றாவது அலை அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் சகல சுற்றுலா தலங்கள், பூங்காக்கள், முகாம்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்காக திறந்திருக்கும் அனைத்து பங்களாக்களையும் மூட வன பாதுகாப்பு திணைக்களம் தீர்மானித்துள்ளது.**

தற்போதைய கோவிட் -19 தொற்று நோயின் அவதான நிலையை கருத்தில் கொண்டு மறு அறிவித்தல் வரை குறித்த பகுதிகள் சுற்றுலா பயணிகளுக்காக திறக்கப்படாது என வனவிலங்கு பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார தெரிவித்தார்.

வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து சுற்றுலா முகாம்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளை கடந்த 5ஆம் திகதி முதல் மூட நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுபோகத்துக்கு அனுமதியாவிடின் அதிகாரிகளை எதிர்த்து போராட்டம்

## புதுஐயங்குளம் விவசாயிகள் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 08

உணவுக்கும், விதை நெல்லுக்கும் சிறுபோகம் விதைப்பதற்கு அனுமதிக்கவில்லையெனில் அரச அதிகாரிகளுக்கு எதிராகப் போராட்டத்தில் குதிப்போம் என புதுஐயங்குளம் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

9 விவசாயிகளின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த சந்திப்பில் அவர்கள் தெரிவித்தவை வருமாறு,

புதியஐயங்குளத்தில் 35 வருடங்களுக்கும் மேலாக நாங்கள் விவசாயம் செய்து வருகின்றோம். இந்தப் பகுதியில் நீர்ப்பாசனத்திற்காக அமைக்கப்பட்ட வாய்க்கால்கள் மூடப்பட்டு புதிய வாய்க்கால்களை எமது காணிகளை ஊடறுத்து அமைக்க தற்போது முயற்சிக்கின்றனர். ஏற்கனவே, இருந்த வாய்க்கால்கள் அனைத்தையும் மண் போட்டு மூடி, அவ்வாறானதொரு இடமே இல்லை என்பது போன்றதொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர்.

புதிய வாய்க்கால் அமைப்பதற்கு அனுமதித்தால்தான் சிறுபோகத்திற்கு நீர் தருவோம் என கூறினர். நாம் ஏற்கனவே இருந்த வாய்க்கால்கள் மூலம் சிறுபோகத்திற்கு நீரை பாய்ச்ச முடியும் என தெரிவித்தோம். ஆனால், இன்று சிறுபோக செய்கையை கமக்கார அமைப்பினரே மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் கமநலசேவைகள் திணைக்கள ஆணையாளருக்கு அறிவித்தோம். அவர் வந்து பார்வையிட்டு 80ஆம் ஆண்டுக்கு முன்னர் எவ்வாறு வீதி மற்றும் வாய்க்கால்கள் இருந்ததோ அதே போன்று அமைக்க கூறினார். அதனை கண்டும் காணாமல் விட்டுள்ளனர். ஓர் ஏக்கர் காணியில் இரு பக்கமும் வீதிக்கு எடுத்துக்கொண்டால் நாம் எவ்வாறு விவசாயம் செய்வது?

இப்போது சிறுபோகத்தையும் நிறுத்தியுள்ளனர். அதனால் பெரிய பாதிப்பை நாங்கள் எதிர்கொள்ளப் போகின்றோம். உணவுக்கு எங்களிடம் நெல் இல்லை. விதைப்பதற்கு நெல்லை வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை. ஓர் ஏக்கர் காணியில் மேற்கொள்ளப்படும் செய்கையில் நாங்கள் எவ்வாறு சீவிப்பது? அதிகாரிகள் அனைவரும் இதற்கு நல்லதொரு முடிவு எடுக்காவிடின் நாங்கள் அதிகாரிகளிற்கு எதிராக வீதியில் இறங்கி போராடும் நிலைக்கு தள்ளப்படுவோம்.

தற்போது கமக்கார அமைப்பில் உள்ள தலைவர் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர். அவரை தொடர்ந்தும் அமைப்பில் இருக்கக்கூடாது என்று கொழும்பில் உள்ள கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் நாயகமே அறிவுறுத்தியிருந்தார். அதற்கான ஆவணங்கள் எமது கைகளில் உள்ளது என்றும் அவர்கள் கூறினர். (ஐ)

# வெலிசர விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்குப் பூட்டு

கொழும்பு, மே. 08

வெலிசர பொருளாதார மத்திய நிலையம் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

அங்கு கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அதன் முகாமையாளர் உறுதிபடுத்தியுள்ளார்.

இந்நிலையில், பொருளாதார மத்திய நிலையத்தைத் தொற்று நீக்கில் செய்யும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

# மரண அறிவித்தல்

பிறப்பு 1975 . 02 . 05



இறப்பு 2021 . 05 . 03

## இராஜசிங்கம் நிசாந்தன்

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் நிசாந்தன் கடந்த (03.05.2021) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராஜசிங்கம் - ரதி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராமசந்திரன் - அன்னலட்சுமி (தோப்பு அச்சுவேலி) தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் அன்புப் பெறாமகனும், சந்திரலேகாவின் அன்புக் கணவரும், சுசிதரன் (லண்டன்), நிரோஜி, நிரோஜன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரலீலா, சந்திரதாஸ், சந்திரஸ்ரீ, சந்திரபாலா, அனுசா (லண்டன்), சிவானந்தன், சுகன்யா ஆகியோரின் அன்பு மைத்துனரும், அக்ஷன்யா, ஹரிணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருஹாஷ்சியின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணி தொடக்கம் 3.30 வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் மாலை 4.30 மணியளவில் அதே இடத்திலேயே இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ.சந்திரதாஸ் (மைத்துனர்)

**தொடர்புகளுக்கு:**
சந்திரலேகா (மனைவி) - +14162686354
குமாரி - +447983361131
சந்திரதாஸ் (மைத்துனர்) - +94776218396

# வவுனியாவில் நீர் தேக்கத்தில் மீன் பிடிக்க சென்றவர் மாயம்!

வவுனியா, மே 08

வவுனியா பம்பைமடுவில் கருங்கல் அகழ்வதற்காக வெட்டப்பட்ட குழியில் தேங்கிய நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து அறியவருவதாவது:

நீரத் தேக்க பகுதியில் மீன்பிடிப்பதற்காக ஐந்து பேர் சென்றனர். ஒருவர் நீர்த்தேகத்தில் இறங்கிய போது அவர், நீரில் இழுத்துச்செல்லப்பட்டு மூழ்கியுள்ளார்.

இதனை அவதானித்த ஏனைய நபர்கள் அவரை தண்ணீருக்குள் இறங்கித் தேடியுள்ளனர். எனினும், அவரை மீட்க முடியவில்லை. சம்பவம் தொடர்பாக கிராமமக்களுக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

தண்ணீரில் மூழ்கியநபரை நேற்று மாலை 6 மணி வரை தேடியபோதும் அவரை மீட்க முடியவில்லை. இந்த சம்பவத்தில் கற்பகபுரம் பகுதியை சேர்ந்த ரவி வயது 50 என்ற குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளார். (ஐ)

## வவுனியா பொருளாதார நிலையத்தில்!

# கொரோனா வைத்தியசாலை அமைக்கும் பணிகள் தீவிரம்!



வவுனியா, மே 08

வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தை கொரோனா வைத்தியசாலையாக மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் கோவிட் 19 மூன்றாம் அலையின் தாக்கமானது வேகமாக அதிகரித்து வரும் நிலையில், நாடு முழுவதும் 8,000 நோயாளர்கள் சிகிச்சை பெறத்தக்க வகையில் கொரோனா சிகிச்சை மையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கோவிட் தடுப்பு செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

இதற்கமைய பல மில்லியன் ரூபாய் செலவில் வவுனியாவில் அமைக்கப்பட்டு பயன்பாடற்ற நிலையில் கிடக்கும் பொருளாதார மத்தியநிலையத்தை 200 கட்டில்கள் கொண்ட கொரொனா வைத்திய சாலையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் :
வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- அன்பே சிவம்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-தமிழக தேர்தல் முடிவுகள் ஈழத்தமிழர் அரசியலில் தாக்கம் செலுத்துமா? பகுதி-01



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்-இந்த வாரம் ராகஸ்வரம் இசைக்குழு




8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்-க.பொ.த . உயர்தரப்பரீட்சையில் சாதித்த மாணவர்களோடு சாதனைகளுக்கு பின்னால்



10.00 மணி : நெற்றிக்கண்



**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி :நற்கருணை ஆராதனை (மறுஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு